# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly மக்களுக்கான குரல் தமிழ் மாத இதழ்

● குரல் - 5 ● இதழ் - 12 ● பிப்ரவரி, 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume - 5 ● Issue - 12 ● February, 2026 ● Tamil Monthly ● Price Rs. 25/-

## எல்லோரும் அறிய வேண்டிய பட்ஜெட் 2026 அறிவிப்புகள்




## பிரதமர் மோடியைத் தாக்க பெண் எம்.பி.க்கள் திட்டம்



ஓம் பிர்லா குற்றச்சாட்டால் அதிர்ச்சி

## மீண்டும் கமல் தயாரிப்பில் சிவகார்த்திகேயன்?

## சென்னையில் பறவைக் காய்ச்சல் மக்களே உஷார்

# பிரதமர் மோடியைத் தாக்க பெண் எம்.பி.க்கள் திட்டம்

## ஓம் பிர்லா குற்றச்சாட்டால் அதிர்ச்சி



“மக்களவையில் பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பெண் எம்.பி.க்கள் திட்டமிட்டு இருந்தனர்” என்று அவைத் தலைவர் ஓம் பிர்லா அதிர்ச்சிகரமான குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த 28-ம் தேதி தொடங்கியது. முதல் நாளில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். கடந்த 1-ம் தேதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். கடந்த 2-ம் தேதி மக்களவையில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கியது. அப்போது முன்னாள் ராணுவ தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பின் அடிப்படையில் எழுதப்பட்ட புத்தகத்தை மேற்கோள் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச முயன்றார். இந்திய, சீன எல்லைப் பிரச்சினை குறித்து அவர் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.



இதன் காரணமாக கடந்த சில நாட்களாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மக்களவையில் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் மோடி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பதிலுரை அளிப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எதிர்க்கட்சிகளின் அமளியால் பிரதமரின் பதில் உரை ரத்து செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து மக்களவை நேற்று காலை கூடியதும் ராகுல் காந்தி பேசுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அவர்களை அமைதி காக்குமாறு அவைத் தலைவர் ஓம் பிர்லாபல முறை கூறினார். ஆனால், எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் மதியம் 12 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. அவை 12 மணிக்கு கூடிய பிறகும் அமளி நீடித்ததால் பிற்பகல் 2 மணி வரையும், அதில் இருந்து 3 மணி வரையும் ஒத்திவைக்கப்பட்டது. அவர்களின் அமளிக்கு நடுவே குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அப்போது அவைத் தலைவர் ஓம் பிர்லா எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: கடந்த புதன்கிழமை பிரதமர் மோடியின் இருக்கையை சூழ்ந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அநாகரிகமாக போராட்டம் நடத்தினர். குறிப்பாக பெண் எம்.பி.க்கள், பிரதமரின் இருக்கையை சூழ்ந்த காட்சியை ஒட்டுமொத்த நாடும் பார்த்து அதிர்ச்சியில் உறைந்தது. பிரதமர் மீது தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டு இருந்தனர். அன்றைய தினம் பிரதமருக்கு என்ன வேண்டுமானாலும் நடந்திருக்கலாம். இது இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் கரும் புள்ளியாகும்.

அசம்பாவிதங்களை தவிர்க்கவே அவைக்கு வர வேண்டாம் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் வேண்டுகோள் விடுத்தேன். இதை பிரதமரும் ஏற்றுக் கொண்டார். ஜனநாயகத்தில் கருத்து வேறுபாடுகள் இயல்பானது. ஆனால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையின் மாண்பை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டனர். குறிப்பாக காங்கிரஸ் எம்.பி.க்கள் மிகவும் அநாகரிகமாக செயல்பட்டனர். அவர்களின் நடவடிக்கைகளை மிகவும் வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறு ஓம் பிர்லா தெரிவித்தார்.

கடந்த 2004-ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரின் போது பாஜக எம்.பி.க்களின் அமளியால் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கின் பதில் உரை இல்லாமல் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 22 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் பிரதமர் நரேந்திர மோடியின் பதில் உரை இல்லாமல் மக்களவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

**காங்கிரஸ் கட்சி மறுப்பு:** காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, “பிரதமர் நரேந்திர மோடியை தாக்கும் வகையில் நாங்கள் யாரும் செயல்படவில்லை. அவர் மீது தாக்குதல் நடத்த நாங்கள் திட்டமிடவும் இல்லை. இதுதொடர்பான குற்றச்சாட்டு அப்பட்டமான பொய். மூன்று பெண்களை பார்த்து பிரதமர் மோடி அஞ்சுகிறார். மக்களவைத் தலைவருக்கு பின்னால் அவர் ஒளிந்து கொண்டிருக்கிறார்" என்று தெரிவித்தார்.

# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

● குரல் - 5 ● இதழ் - 11 ● ஜனவரி, 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume-5 ● Issue-11 ● January,2026 ● Monthly ● Price Rs.25/-



நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்

G.B. **பச்சையப்பன்**

கௌரவ ஆசிரியர்

டாக்டர் M.A.M. **ராமசாமி** அவர்களின்

முன்னாள் முதன்மைச் செயலாளருமான

செட்டிநாடு S. **ராஜேந்திரன்**

ஆலோசகர்கள்

நிதில் & கோ S.R.P. **ராஜன்**

நடிகர் பயில்வான் **ரங்கநாதன்**

R. **கதிரவன்**

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்

R. ரிச்சர்ட் ராஜ், K. முகமது அலி

S. சதீஷ்குமார், K. குட்டி கிருஷ்ணன்

L. லிங்கேஷ்வரன்

G.K. பாண்டியநேரு (தேனி)

குரு பாண்டியன் (திண்டுக்கல்)

நிருபர்கள்

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

G. ராஜ்குமார் (விருதுநகர்)

P. ஆகாஷ் (சென்னை)

M. ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

K. தினேஷ் (மத்திய சென்னை)

M. தினேஷ்

கா.சுடர்மதி (காஞ்சிபுரம்)

புகைப்பட கலைஞர்

எ. சங்கர்

VRJ Graphics

பக்க வடிவமைப்பு:

**90941 19636**

நிர்வாக மேற்பார்வையாளர்கள்

P. **அஜய்** B.Com., MBA., P. **ஆகாஷ்** B.Com.,

சட்ட ஆலோசகர்கள்

E. **யோபு** M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. **நவீன் சந்தர்** B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. **பார்த்திபன்** B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)

பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600004

தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025

அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


# ஆசிரியர் கடிதம்...

## குலசேகரன்பட்டினத்தில் இருந்து முதல் ராக்கெட் அடுத்த ஆண்டு விண்ணில் பாயும்



இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில், புதிதாக தொடங்கப்படும் ராக்கெட் ஏவுதளத்தின் பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து, 2027 மார்ச் மாதத்துக்குள் முதல் ராக்கெட் விண்ணில் செலுத்தப்படும்.



2040-ம் ஆண்டில் இந்தியா மனிதனை நிலவுக்கு அனுப்பி வைக்கும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார். அதற்கேற்ப ஆராய்ச்சிகள், செயல்பாடுகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு முன்பாக சந்திரயான்-4, சந்திரயான்-5 விண்கலங்கள் அனுப்பப்பட இருக்கின்றன.

தொடர்ந்து, இந்தியா - ஜப்பான் கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் சந்திரயான் திட்டமும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்த திட்டத்தில் 6,500 கிலோ எடை கொண்ட லேண்டர் மற்றும் 350 கிலோ எடையிலான ரோவர் அனுப்பப்பட இருக்கின்றன. இது 2028-ம் ஆண்டு விண்ணில் ஏவப்பட இருக்கிறது.

மேலும், இந்தாண்டு பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம் 3 மற்றும் ஆளில்லா ககன்யான் விண்கலம் என அதிகமான ராக்கெட்கள் விண்ணில் செலுத்தப்பட உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில், புதிதாக தொடங்கப்படும் ராக்கெட் ஏவுதளத்தின் பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து, 2027 மார்ச் மாதத்துக்குள் முதல் ராக்கெட் விண்ணில் செலுத்தப்படும் என்பதினை சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். ●



**G.B.பச்சையப்பன்**
தலைமை ஆசிரியர்



# எல்லோரும் அறிய வேண்டிய பட்ஜெட் 2026 அறிவிப்புகள்

**நிர்மலா சீதாராமன் கடந்த பிப்ரவரி 1, 2026 அன்று பாராளுமன்றத்தில் ஒன்றிய பட்ஜெட் 2026–27ஐ தாக்கல் செய்தார். இது அவரது தொடர்ச்சியான 9ஆவது பட்ஜெட் ஆகும். இந்த பட்ஜெட்டில் சமானிய மக்கள் முதல் பெரும் பணக்காரர்கள், தொழிலதிபர்கள், முதலீட்டாளர்கள் என அனைவரும் தெரிந்துக்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்களை தொகுத்து வழங்கப்பட்டு உள்ளது.**

## பயோபார்மா சக்தி திட்டம்:

*பயோபார்மா உற்பத்தியில் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்ற 5 ஆண்டுகளுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. 3 புதிய தேசிய மருந்துசார் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் (என்ஐபிஇஆர்) மற்றும் 7 தற்போதுள்ளவை மேம்படுத்தப்படும். 1000க்கும் மேற்பட்ட கிளினிக்கல் டிரையல்ஸ் தளங்கள் உருவாக்கப்படும்.*

## இந்திய செமிகண்டக்டர் மிஷன் 2.0:

*செமிகண்டக்டர் உபகரணங்கள், உற்பத்தி, ஃபுல் ஸ்டேக் இந்திய ஐபி வடிவமைப்பு, சப்ளை செயின் வலுப்படுத்தல் ஆகியவற்றுக்கு ஐஎஸ்எம் 2.0 தொடங்கப்படும். தொழில்துறை தலைமையிலான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.*

## எலக்ட்ரானிக்ஸ் பாகங்கள்:

*உற்பத்தி திட்டம் எலக்ட்ரானிக்ஸ் பாகங்கள் உற்பத்தி திட்டத்துக்கு ஒதுக்கீடு ரூ.40,000 கோடியாக உயர்த்தப்பட்டது. இது உள்நாட்டு உற்பத்தியை பெரிதும் ஊக்குவிக்கும்.*

## ரேர் எர்த் காரிடார்கள்:

*ஒடிசா, கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு போன்ற கனிம வளம் நிறைந்த மாநிலங்களில் ரேர் எர்த் காரிடார்கள் அமைக்கப்படும். சுரங்கம், பதப்படுத்தல், ஆராய்ச்சி, உற்பத்திக்கு சேவைகள் அளிக்கப்படும்.*

## 3 கெமிக்கல் பார்க்குகள்:

*3 பிரத்யேக கெமிக்கல் பார்க்குகள் அமைக்கப்படும். கிளஸ்டர் அடிப்படையிலான பிளக்-ஆண்ட்-ப்ளே மாதிரியில் இது இயங்கும்.*

## கேப்பிட்டல் கூட்ஸ் திறன் வலுப்படுத்தல்:

*பொதுத்துறை நிறுவனங்களால் 2 இடங்களில்*




டிஜிட்டலாக இயங்கும் ஹை-டெக் டூல் ரூம்கள் அமைக்கப்படும். அதீத துல்லிய பாகங்களை நாட்டிலேயே வடிவமைத்து, சோதனை செய்து, உற்பத்தி செய்யும். கட்டுமான மற்றும் உள்கட்டமைப்பு உபகரணங்கள் மேம்பாட்டு திட்டம் அறிவிக்கப்பட்டது.

## கன்டெய்னர் உற்பத்தி திட்டம்:

உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட கன்டெய்னர் உற்பத்தி சூழலை உருவாக்க ரூ.10,000 கோடிக்கு மேல் 5 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## நெசவு துறை ஒருங்கிணைந்த திட்டம்:

இயற்கை இழைகள் (பட்டு, கம்பளி, சணல்), மனிதனால் உருவாக்கப்பட்ட இழைகள், புதிய இழைகளில் சுயசார்பு அடைய தேசிய பைபர் திட்டம் அறிவிக்கப்பட்டது. இதில் பாரம்பரிய தொழிற்துறை பகுதிகளை நவீனமயமாக்கும் திட்டம், மெகா டெக்ஸ்டைல் பார்க்குகள் அமைக்கப்படும்.

## மகாத்மா காந்தி கிராம் ஸ்வராஜ் முயற்சி:

காதி, கைத்தறி, கைவினைப்பொருட்களை வலுப்படுத்த மகாத்மா காந்தி கிராம் ஸ்வராஜ் முயற்சி அறிவிக்கப்பட்டது. உலக சந்தை இணைப்பு, பிராண்டிங், பயிற்சி, தரக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஆதரவு அளிக்கப்படும்.

## பழைய தொழிற்துறை பகுதிக்கு மறுமலர்ச்சி:

200 பழைய தொழிற்துறை பகுதிக்களை மீட்டெடுக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு மூலம் விலை அடிப்படையில் போட்டித்தன்மை மற்றும் திறன் உயர்த்தப்படும்.

## சாம்பியன் எம்எஸ்எம்இக்கள் உருவாக்கம்:

ரூ.10,000 கோடி எம்எஸ்எம்இ வளர்ச்சி நிதி அறிவிக்கப்பட்டது. எதிர்கால சாம்பியன்களை உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் ஊக்குவிப்பு அளிக்கப்படும்.

## தற்சார்பு இந்தியா நிதியம்:

தற்சார்பு இந்தியா நிதிக்கு கூடுதலாக ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறு நிறுவனங்களுக்கு ரிஸ்க் கேப்பிட்டல் பெறுவதை தொடர்ந்து வழங்கும்.

## தொழில்முனைவோர் பயிற்சி:

ஐசிஏஐ, ஐசிஎஸ்ஐ, ஐசிஎம்ஏஐ போன்ற நிறுவனங்கள் டயர்-2, டயர்-3 நகரங்களில் 'கார்ப்பரேட் மித்ரா'க்களை உருவாக்க குறுகிய கால பயிற்சி வகுப்புகள் வடிவமைக்கப்படும்.

## உள்கட்டமைப்புக்கு பெரும் தள்ளுபடி:

2026-27 நிதியாண்டுக்கு மூலதன செலவு ரூ.12.2 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு ரிஸ்க் கேரெண்டி நிதி அமைக்கப்படும்.

## சுற்றுச்சூழலுக்கு உகந்த சரக்கு போக்குவரத்து:

டான்குனி-சூரத் டெடிகேட்டட் ஃபிரைட் காரிடார்கள் அமைக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் 20 புதிய தேசிய நீர்வழிகள் இயங்கும். என்டபிள்யு-5 ஒடிசாவில் தொடங்கி தல்சர், அங்குல், கலிங்க நகர் ஆகியவற்றை பராதீப், தாம்ரா துறைமுகங்களுடன் இணைக்கும்.

## பயிற்சி மையங்கள்:

நீர்வழிகள் முழுவதும் தேவையான தொழிலாளர்களை உருவாக்க பிராந்திய சிறப்பு மையங்கள் அமைக்கப்படும். வாரணாசி, பாட்னாவில் உள்நாட்டு நீர்வழிகளுக்கு கப்பல் பழுதுபார்க்கும் அமைப்பு உருவாக்கப்படும்.

## கடற்கரை சரக்கு ஊக்குவிப்பு:

கடற்கரை சரக்கு ஊக்குவிப்பு திட்டம் அறிவிக்கப்பட்டது. ரயில்-சாலை போக்குவரத்திலிருந்து நீர்வழி மற்றும் கடற்கரை ஷிப்பிங்குக்கு மாற்றத்தை ஊக்குவிக்கும். 2047ஆம் ஆண்டுக்குள் பங்கு 6 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயரும்.

## சீப்பிளேன் உற்பத்தி:

ஊக்குவிப்பு சீப்பிளேன் உற்பத்தியை உள்நாட்டில் தயாரிக்க ஊக்குவிப்பு அளிக்கப்படும். சீப்பிளேன் விஜிஎப் திட்டம் அறிவிக்கப்பட்டது.

## நீண்டகால எனர்ஜி பாதுகாப்பு:

அடுத்த 5 ஆண்டுகளுக்கு கார்பன் கேப்சர் பயன்பாடு மற்றும் சேமிப்பு தொழில்நுட்பத்துக்கு ரூ.20,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நகர பொருளாதார பகுதிகள்:

நகர பொருளாதார பகுதிகளுக்கு ஒவ்வொன்றுக்கு ரூ.5,000 கோடி 5 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அதிவேக ரயில் தடங்கள்:


மும்பை-புனே, புனே-ஹைதராபாத், ஹைதராபாத்-பெங்களூரு, ஹைதராபாத்-சென்னை, சென்னை-பெங்களூரு, டெல்லி-வாரணாசி, வாரணாசி-சிலிகுரி ஆகிய 7 அதிவேக ரயில் வழித்தடங்கள் அமைக்கப்படும்.


## வங்கி துறை ஆய்வு:

விக்சித் பாரத் இலக்குக்கு வங்கி துறையை மாற்றியமைக்க உயர்மட்ட குழு அமைக்கப்படும். நிதி ஸ்திரத்தன்மை, உள்ளடக்கம், நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## பவர் ஃபைனான்ஸ் மற்றும் ஆர்இசி மறுசீரமைப்பு:

பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும்




ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் மறுசீரமைக்கப்படும். அளவு மற்றும் திறனை உயர்த்தும்.

## வெளிநாட்டு முதலீட்டு விதிகள் மறுஆய்வு:

வெளிநாட்டு முதலீட்டு விதிகள் மறுஆய்வு செய்யப்படும். இந்தியாவின் தற்போதைய பொருளாதார முன்னுரிமைகளுக்கு ஏற்ப பயனர்களுக்கு உகந்த அடிப்படையிலான சட்டம் கொண்டு வரப்படும்.

## நகராட்சி பத்திரங்கள்:

ரூ.1,000 கோடிக்கு மேல் மதிப்புள்ள நகராட்சி பத்திர வெளியீட்டுக்கு ரூ.100 கோடி ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது.

## கல்வி முதல் தொழில்முனைவு வரை:

கல்வி முதல் தொழில்முனைவு வரை சேவைதுறையை வலுப்படுத்த உயர்மட்ட நிலைக்குழு அமைக்கப்படும்.

## துணை சுகாதார நிபுணர்கள்:

துணை சுகாதார நிபுணர்களுக்கான நிறுவனங்கள் மேம்படுத்தப்படும். அரசு மற்றும் தனியார் துறைகளில் புதிய நிறுவனங்கள் அமைக்கப்படும். 5 ஆண்டுகளில் 1 லட்சம் துணை சுகாதார நிபுணர்கள் பயிற்றுவிக்கப்படுவர்.

## ஆயுர்வேத நிறுவனங்கள்:

3 புதிய அகில இந்திய ஆயுர்வேத நிறுவனங்கள் அமைக்கப்படும்.

## கால்நடை துறை:

கால்நடை நிபுணர்கள் 20,000க்கும் மேல் அதிகரிக்கப்படுவர். தனியார் துறையில் கால்நடை கல்லூரிகள், மருத்துவமனைகள், நோயறிதல் ஆய்வகங்கள், இனப்பெருக்க வசதிகளுக்கு கடன் தொடர்பான மூலதன மானிய உதவி திட்டம் தொடங்கப்படும்.

## ஆரஞ்சு பொருளாதாரம்:

மும்பை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கிரியேட்டிவ் டெக்னாலஜிஸ் ஆதரவுடன் அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கேமிங், காமிக்ஸ் (ஏவிஜிசி) கண்டென்ட் கிரியேட்டர் லேப்கள் 15,000 பள்ளிகள் மற்றும் 500 கல்லூரிகளில் அமைக்கப்படும்.

## கல்வி:

தொழில்துறை மற்றும் லாஜிஸ்டிக் வழித்தடத்தின் அருகில் 5 பல்கலைக்கழக நகரங்கள் உருவாக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண்கள் விடுதி மூலதன ஆதரவுடன் அமைக்கப்படும்.

## சுற்றுலா:

நேஷனல் கவுன்சில் ஃபார் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி, தேசிய ஹாஸ்பிடாலிட்டி நிறுவனமாக மேம்படுத்தப்படும். 20 சுற்றுலா தலங்களில் 10,000 வழிகாட்டிகளுக்கு ஐஐஎம் உடன் இணைந்து 12 வார பயிற்சி அளிக்கப்படும்.

## தேசிய டிஜிட்டல் அறிவு கிரிட்:

கலாச்சார, ஆன்மீக, பாரம்பரிய தலங்களை டிஜிட்டலாக ஆவணப்படுத்த தேசிய டெஸ்டினேஷன் டிஜிட்டல் நாலெட்ஜ் கிரிட் அமைக்கப்படும்.

## பாரம்பரிய மற்றும் கலாச்சார சுற்றுலா:

லோதல், தோலாவிரா, ராக்கிகர்ஹி, ஆதிச்சநல்லூர், சாரநாத், ஹஸ்தினாபுர், லே அரண்மனை உள்ளிட்ட 15 தொல்பொருள் தளங்கள் சுற்றுலா இடங்களாக மாற்றப்படும்.

## விளையாட்டு:

அடுத்த பத்தாண்டுகளுக்கு விளையாட்டு துறையை மாற்றியமைக்க 'கேலோ இந்தியா மிஷன்' தொடங்கப்படும்.

## நீண்டகால தீர்வுகள்:

நீண்டகால பிரச்சினைகளிலிருந்து விலகி நீண்டகால தீர்வுகளை நோக்கி நகர்கிறோம் என்று பிரதமர் மோடி கூறினார். இது பொருளாதார ஆய்வறிக்கை தாக்கலின்போது தெரிவிக்கப்பட்டது.

## நிதி ஒதுக்கீடு மற்றும் வளர்ச்சி:

பட்ஜெட் மூலம் கிழக்கு பகுதி வளர்ச்சிக்கு பெரும் அறிவிப்புகள் வந்துள்ளன. எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைகள், பௌத்த சுற்றுலா வட்டம், சிறுபான்மையினருக்கான திட்டங்கள் ஆகியவை சிறப்பு கவனம் பெற்றுள்ளன. மத்திய அமைச்சர் கிரேன் ரிஜிஜு இதை "ரிஃபார்ம் எக்ஸ்பிரஸ்" என்று புகழ்ந்துள்ளார். புதிய வருமான வரி சட்டம் புதிய வருமான வரி சட்டம் 2025 ஏப்ரல் 2026 முதல் அமலுக்கு வரும். வருமான வரி செலுத்துபவர்கள் எளிதாக ஐடிஆர் தாக்கல் செய்யும் வகையில் விதிகள் மற்றும் படிவங்கள் எளிமையாக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படும்.

## எளிதான வாழ்க்கைமுறை சீர்திருத்தங்கள்:

மோட்டார் விபத்து உரிமை கோரிக்கை நீதிமன்றம் வழங்கும் வட்டிக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படும். இதற்கான டிடிஎஸ் முற்றிலும் நீக்கப்படும்.

## டிசிஎஸ் சீரமைப்பு:

வெளிநாட்டு சுற்றுலா தொகுப்புகளுக்கு டிசிஎஸ் விகிதம் 2%ஆக குறைக்கப்பட்டது (முன்பு 2-20%). கல்வி மற்றும் மருத்துவ செலவுகளுக்கான எல்ஆர்எஸ்-டிசிஎஸ் 5%லிருந்து 2%ஆக குறைக்கப்பட்டது.

## மேன்பவர் சேவைகளுக்கு டிடிஎஸ் எளிமை:

மேன்பவர் சேவைகளுக்கு டிடிஎஸ் விதிகள் தெளிவுபடுத்தப்பட்டன. இது தொழிலாளர் அதிகம் உள்ள தொழில்களுக்கு பெரும் நிவாரணமாக அமையும்.

## சிறு வரி செலுத்துபவர்களுக்கு திட்டம்:

சிறு வரி செலுத்துபவர்களுக்கு குறைந்த அல்லது பூஜ்ஜிய டிடிஎஸ் சான்றிதழ் பெற தானியங்கி செயல்முறை அறிவிக்கப்பட்டது. மதிப்பீட்டாளரிடம் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

## பிரிவு 15ஜி/15எச் ஒற்றை சாளர தாக்கல்:

டிவிடெண்ட், வட்டி போன்றவற்றுக்கு டிடிஎஸ் விலக்கு பெற பிரிவு 15ஜி/15எச்-ஐ டெபாசிட்டரிகளிடம் ஒற்றை சாளரத்தில் தாக்கல் செய்யலாம்.

## திருத்த ஐடிஆர் தாக்கல் கால நீட்டிப்பு:

வரி திருத்த ரிட்டர்ன் தாக்கல் காலம் டிசம்பர் 31லிருந்து மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டது. சிறு கட்டணத்துடன் தாக்கல் செய்யலாம்.

## வரி தாக்கல் கால அட்டவணை:

வரி ரிட்டர்ன் தாக்கல் கால அட்டவணை படிப்படியாக மாற்றப்படும். இது வரி செலுத்து பவர்களுக்கு எளிமைப்படுத்தப்படும்.

## என்ஆர்ஐ அசையா சொத்து விற்பனை டிடிஎஸ்:

வெளிநாட்டினர் அசையா சொத்து விற்கும் போது டிடிஎஸ்-ஐ குடியிருப்பாளர் பான் சலான் மூலம் செலுத்தலாம். டான் எண் தேவையில்லை.

## சிறு வெளிநாட்டு சொத்து வெளிப்படுத்தல்:

நிவாரணம் ரூ.20 லட்சத்துக்கு கீழ் மதிப்புள்ள அசையா வெளிநாட்டு சொத்துகளை வெளிப்படுத்தத் தவறியவர்களுக்கு வழக்குத் தொடரப்படாது. இது அக்டோபர் 1, 2024 முதல் பின்னோக்கி அமலாகும்.

பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள இந்த அறிவிப்புகள் வரி செலுத்துபவர்களுக்கு பெரும் நிவாரணத்தை அளிக்கின்றன. வரி அமைப்பு எளிமையாக்கப்பட்டு, வெளிநாட்டு முதலீடு, சுற்றுலா, கல்வி ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. சாதாரண மக்களுக்கு வரி சுமை குறைவு மற்றும் எளிய இணக்கம் கிடைக்கும்.

---

### மேற்கு வங்கத்தின் சிலிகுரி பகுதியில்

# பூமிக்கடியில் ரயில் பாதை

**அஸ்வினி வைஷ்ணவ் தகவல்**



வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு வங்கத்தை இணைக்கும் வகையில் சிலிகுரி பூமிக்கடியில் 40 கி.மீ. தொலைவுக்கு ரயில் பாதை அமைக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் சிலிகுரி பாதை இந்தியாவின் பிரதான பகுதியையும் வட கிழக்கு மாநிலங்களையும் இணைக்கிறது. இது 22 கி.மீ. அகலம் கொண்ட 60 கி.மீ. தொலைவுடைய மிக குறுகிய பாதை ஆகும். இதன் இரு புறமும் நேபாளம், வங்கதேச எல்லைகள் அமைந்துள்ளன.

வடபகுதியில் பூடான் எல்லை உள்ளது. சீனா மற்றும் வங்க தேசத்தால் சிலிகுரி பாதைக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் நீடிக்கிறது. இதை எதிர்கொள்ள அங்கு பூமிக்கடியில் ரயில் பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் காணொலி வாயிலாக நேற்று செய்தியாளர்களிடம் கூறியிருப்பதாவது: வடகிழக்கு மாநிலங்களையும் இந்தியாவின் பிரதான பகுதியையும் இணைக்கும் வகையில் சிலிகுரி பாதையில் 40 கி.மீ. தொலைவுக்கு பூமிக்கடியில் ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

பாதுகாப்பு ரீதியாக இது மிகவும் முக்கியமான திட்டமாகும். மேலும் தற்போது இந்த வழித்தடத்தில் உள்ள ரயில் தடத்தை, 4 வழித்தடமாக மாற்றவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

# “வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது”

## மாநிலங்களவையில் பிரதமர் மோடி பேச்சு



இந்தியா பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறது என்றும், வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் கூட்டத் தொடரை முன்னிட்டு கடந்த ஜனவரி 28-ம் தேதி, நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் பிரதமர் மோடி உரை நிகழ்த்துவதை தவிர்த்துவிட்டார். இதையடுத்து, பிரதமர் மோடியின் பதில் உரை இல்லாமல் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இன்று மாநிலங்களவையில் நடத்தப்பட்ட விவாதத்தில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியது: “குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், நடுத்தர வர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கம், ஏழைகள், கிராமங்கள், விவசாயிகள், பெண்கள், அறிவியல், தொழில்நுட்பம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும், இந்தியாவின் முன்னேற்றத்துக்கான ஒருங்கிணைந்த குரலை நாடாளுமன்றத்தில் எதிரொலித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்கள் இந்தியாவின் திறனை எவ்வாறு முன்னேற்றுகிறார்கள் என்பதை அவர் விரிவாக விவாதித்துள்ளார். ஒவ்வொரு பிரிவின் திறனையும் அவர் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்தின் மீது அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். இது நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

21-ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டு முடிந்துவிட்டது, ஆனால் இந்த இரண்டாவது காலாண்டு கடந்த நூற்றாண்டில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாவது காலாண்டைப் போலவே தீர்க்கமானது. இந்த இரண்டாவது காலாண்டும் அதே அளவுக்கு சக்திவாய்ந்ததாகவும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி அதே வேகத்தில் முன்னேறும் என்பதையும் நான் தெளிவாகக் காண்கிறேன்.

இன்று, நாட்டின் ஒவ்வொரு நபரும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளதாக உணர்கிறார்கள். இப்போது நாம் நிறுத்தவோ அல்லது திரும்பிப் பார்க்கவோ கூடாது. நாம் வேகமாக முன்னேறி, நமது இலக்குகளை அடைந்தாக வேண்டும். நாம் அந்த திசையில் நகர்கிறோம்.

உலகின் முக்கியப் பொருளாதாரங்களில், இந்தியா இன்று குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. விரைவான வளர்ச்சியும் குறைவான பணவீக்கமும் கொண்ட இந்த அரிய கலவையானது, நமது பொருளாதாரத்தின் வலிமைக்கும் மீள்தன்மைக்கும் ஒரு சான்றாகும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்தியா 'பலவீனமான ஐந்து' பொருளாதார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், நாம் உலகின் 6-வது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். இருப்பினும், இடைப்பட்ட ஆண்டுகளில்

ஏற்பட்ட தவறான நிர்வாகம் காரணமாக, நமது தரம் 11வது இடத்துக்குச் சரிந்தது. இப்போது, நாம் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உலகின் மிகவும் வளமான நாடுகள் கூட வயதாகி வருகின்றன. அவற்றின் மக்கள் தொகை நாம் முதியவர்கள் என்று அறியும் வயதை எட்டியுள்ளது. நமது நாடு வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டுகிறது. அதே நேரத்தில், நமது நாடு நாளுக்கு நாள் இளமையாகி வருகிறது. இது இளம் மக்கள்தொகை கொண்ட நாடு.

இன்று, உலகம் ஒரு புதிய உலக ஒழுங்கை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. தற்போதைய சூழ்நிலைகளையும் நிலவரங்களையும் அரசியல் சார்பின்றி நாம் பகுப்பாய்வு செய்யும்போது, இந்தியாவின் மீது நாட்டம் அதிகரித்து வருவதை தெளிவாகக் காண முடிகிறது. உலகின் நண்பனாகவும், உறவினனாகவும் திகழ்வதோடு, இன்று இந்தியா பல நாடுகளுக்கு ஒரு நம்பகமான பங்காளியாக உருவெடுத்துள்ளது.

இந்தியா மீதான உலகத்தின் ஈர்ப்பு அதிகரித்து வருவதால், இந்தியாவின் திறமையின் முக்கியத்துவத்தையும் அது அங்கீகரித்து வருகிறது. கனவுகள், உறுதி, வலிமை ஆகியவற்றைக் கொண்ட உலகின் மிக முக்கியமான இளம் திறமையாளர்களை நாம் கொண்டுள்ளோம். சக்தியின் ஆசிர்வாதம் நம்முடன் உள்ளது. இன்று உலகில் உருவாகி வரும் சவால்களுக்கு தீர்வுகளை வழங்கும் நாடாக இந்தியா உள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் நாங்கள் ஒன்பது ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளோம். இவற்றில், 'அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய்' என்று அடிக்கடி குறிப்பிடப்படும் மிக முக்கியமான ஒப்பந்தமான, ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளுடனான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகின் முக்கிய பொருளாதாரங்களில் இந்தியாவின் வளர்ச்சி இன்று மிக அதிகமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது, நாம் உலகின் ஆறாவது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். ஆனால் இவர்கள் (எதிர்க்கட்சி வரிசையில் உள்ள காங்கிரஸை சுட்டிக்காட்டிப் பேசினார்) நமது பொருளாதாரத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தி, அதை 11-வது இடத்திற்குத் தள்ளியுள்ளனர். இன்று, நாம் மூன்றாவது இடத்தில் உள்ள பொருளாதாரமாக மாறுவதை நோக்கி வேகமாக நகர்கிறோம். இன்று, இந்தியா அனைத்து துறைகளிலும் நம்பிக்கையான இந்தியாவாக உள்ளது.

'சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம்' என்ற கொள்கையுடன் நாம் முன்னேறியுள்ளோம். நாடு இப்போது சீர்திருத்தப் பாதையில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது. எங்கள் முயற்சிகள் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதிலும், நமது தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பதிலும் கவனம் செலுத்தியுள்ளன. இந்தியா இப்போது உலக அரங்கில் போட்டியிடத் தயாராக உள்ளது என்று நான் நம்பிக்கையுடன் கூற முடியும்" என்று பிரதமர் மோடி பேசினார்.

# ஜெயலலிதாவுக்கு 'பாரத ரத்னா' வழங்க மாநிலங்களவையில் அதிமுக எம்பி கோரிக்கை

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாட்டின் உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று மாநிலங்களவையில் அதிமுக எம்பி தனபால் கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய தனபால், "தமிழ்நாட்டின் மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருதான பாரத் ரத்னா விருது வழங்கப்படுதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும். நிர்வாகத் திறமையும் அரசியல் துணிவும் ஒருங்கே கோண்ட ஒரு தலைவராக மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு தலைவராக அவர் திகழ்ந்தார்.

திரைத்துறையில் பணியாற்றிய ஜெயலலிதா, தமிழக முதல்வராக உயர்ந்தவர். அவர் மக்களின் நம்பிக்கையை பெற்று பல முறை முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பெண்கள், ஏழைகள், பிற்படுத்தப்பட்ட மக்களின் அன்பை பெற்றவராக அவர் இருந்தார். மக்களால் நான்; மக்களுக்காகவே நான் என்ற அவரது கொள்கை, அவரது அரசில் பிரதிபலித்தது.

தாலிக்கு தங்கம் திட்டம், தொட்டில் குழந்தை திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையம், மழைநீர் சேகரிப்பு, மகப்பேறு உதவிகள், அம்மா கிளினிக், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா லேப்டாப், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச சைக்கிள், பணிபுரியும் பெண்களுக்கு அம்மா ஸ்கூட்டி, அம்மா குழந்தை பெட்டகம், அம்மா சிமெண்ட், அம்மா கிரைண்டர், மிக்சி, அம்மா டேபிள் பேன், அம்மா மருந்தகம்.. போன்ற திட்டங்களை வழங்கியவர் ஜெயலலிதா. இவை, உணவு பாதுகாப்பு, சுகாதார பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு உதவியாக இருந்துள்ளன.

இட ஒதுக்கீட்டின் அளவை 69% உயர்த்தி அதை



உறுதிப்படுத்திய ஜெயலலிதாவின் நடவடிக்கை இந்திய சமூக நீதி அரசியலில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இதன்மூலம் அவர் சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றார்.

சட்டம் ஒழுங்கு, நிர்வாக ஒழுங்கு, தமிழ் கலாச்சாரம், தமிழ் மொழி ஆகியவற்றை பாதுகாப்பதில் தன்னிகரற்றவராக விளங்கினார். அவருக்கு பாரத் ரத்னா விருதை வழங்க மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

தனபால் பேச்சுக்கு இடையே குறுக்கிட்ட மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், தமிழ்நாட்டுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை மத்திய அரசிடம் நீங்கள் கேட்கலாமே என கூறினார். அதற்கு, மத்திய அரசுக்கு கோரிக்கையாகவே இதை தெரிவிக்கிறேன் என தனபால் குறிப்பிட்டார்.

# இந்தியாவுக்கான வரியை

# 18% ஆக குறைத்த அமெரிக்கா

## ட்ரம்ப் அறிவிப்பும் பின்னணியும்



இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவு கடந்த ஓர் ஆண்டுகாலமாக சுமுகமானதாக அமையவில்லை. வரி விதிப்பு, வர்த்தக உறவு என பல்வேறு காரணங்கள் இதன் பின்னணியில் உள்ளன. இந்த சூழலில் திங்கட்கிழமை (பிப்.2) அன்று இந்தியாவுக்கான இறக்குமதி வரியை 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி உடன் ட்ரம்ப் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டிருந்தார். அதில்தான் இருதரப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதை ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதள பதிவு மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தை உறுதி செய்துள்ளார்.

இந்தியாவுக்கு 25 சதவீதம் பரஸ்பர வரி (*Reciprocal Tariffs*) மற்றும் கூடுதல் வரி 25 சதவீதம் என மொத்தம் 50 சதவீதம் வரி விதித்தது அமெரிக்கா. இந்நிலையில், தற்போது பரஸ்பர வரியை 18 சதவீதமாக குறைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ட்ரம்பின் இந்த அறிவிப்பை பிரதமர் மோடி வரவேற்று நன்றி தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் பதிவு: "பிரதமர் நரேந்திர மோடி உடன் மேற்கொண்ட உரையாடலை எண்ணி பெருமை கொள்கிறேன். எனது அருமை நண்பர்களில் அவர் ஒருவர். வலிமையான மற்றும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவர். வர்த்தகம், ரஷ்யா - உக்ரைன் போர் என பல்வேறு விஷயங்கள் குறித்து நாங்கள் பேசினோம்.

ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக அவர் உறுதி அளித்தார். மேலும், அமெரிக்கா மற்றும் வெனிசுலாவில் இருந்து எண்ணெய் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார். நிச்சயம் இந்த நகர்வு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரும்.

பிரதமர் மோடி உடனான நட்பு மற்றும் நான் கொண்டுள்ள மதிப்பு காரணமாக அவரது கோரிக்கையை ஏற்று வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்து முடித்துள்ளோம். அந்த வகையில் பரஸ்பர வரி விதிப்பு 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்படும். தொழில்நுட்பம், வேளாண், நிலக்கரி மற்றும் பல பொருட்களை அமெரிக்காவில் இருந்து பெறுவதாக பிரதமர் மோடி உறுதி அளித்தார். இந்தியாவுடனான உறவு முன்பை விடவும் வரும் நாட்களில் வலுவாக இருக்கும்" என ட்ரம்ப் தெரிவித்தார். பிரதமர் மோடி உடன் தொலைபேசியில் உரையாடிய பிறகு இந்த பதிவு அவர் வெளியிட்டார். இதற்கு பிரதமர் மோடியும் இந்திய மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்.

பரஸ்பர வரிவிதிப்பு: அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரிவிதிப்புக் கொள்கையை அமெரிக்கா கடை பிடிக்கும் என அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

கனடா, மெக்சிகோ உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கடும் இறக்குமதி வரிகளை விதித்துள்ளார். தனது இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், சீனா மீதான வரியை ட்ரம்ப் பல மடங்கு உயர்த்தினார். பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வரி விகிதத்தை குறைத்தார்.

இந்தியாவுக்கு 50% வரி: இந்தியப் பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி, கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து, இந்தியாவுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார்.

ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கையால், இந்தியாவில் தொழில் துறைகடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. தமிழகத்திலும் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல், நகைகள், ரத்தினக் கற்கள், தோல் காலணிகள், கடல் பொருட்கள், ரசாயனங்கள் உள்ளிட்ட துறைகள் பாதிக்கப்பட்டன. தற்போது இதில் பரஸ்பர வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது.

## இந்தியா – ஐரோப்பிய ஒன்றியம் இடையே

# தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து

**● ஜவுளி, கடல்சார் பொருட்கள், தோல், காலணிகள், நகைகள், விளையாட்டு பொருள் ● ஏற்றுமதிக்கு 0% வரி, இறக்குமதி செய்யப்படும் சொகுசு கார்கள், மது வகைகளுக்கு விலை குறையும் ● பிரதமர் மோடி அறிவிப்பு**

இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையே வரலாற்று சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் மோடி நேற்று அறிவித்தார். இதன் மூலம் இந்தியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஜவுளி, ஆடைகள், கடல்சார் பொருட்கள், தோல் பொருட்கள், காலணிகள், விளையாட்டு பொருட்கள், பொம்மைகளுக்கான இறக்குமதி வரி அடியோடு ரத்தாகிறது. அதேநேரத்தில் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கள், ஒயின் உள்ளிட்ட பொருட்களுக்கு வரி குறைக்கப்பட உள்ளது.

மொத்தம் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்வதற்கான முயற்சிகளை கடந்த 2007ம் ஆண்டு தொடங்கியது. பல்வேறு விவகாரங்களில் வேறுபாடுகள் காரணமாக 2013ல் இந்த பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது. பின்னர் மீண்டும் 2020ம் ஆண்டு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை கள் தொடங்கப்பட்டன. இந்நிலையில், சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்கது: இந்தியாவின் 77வது குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர்களான உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் அன்டோனியோ கோஸ்டா ஆகியோருடன் உச்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு இந்தியா ஐரோப்பிய ஒன்றியத்துடன் தனது வரலாற்றிலேயே மிகப்பெரிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை முடித்திருப்பதாக பிரதமர் மோடி அறிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கையில், “இது வெறும் வர்த்தக ஒப்பந்தம் மட்டுமல்ல.

இருதரப்பு செழுமைக்கான புதிய வரைபடம். இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய கூட்டாண்மை ஒட்டுமொத்த உலகிற்கும் உதவும்'' என்றார். அனைத்து ஒப்பந்தங்களின் தாய்: ஐரோப்பிய கவுன்சில் தலைவர் கோஸ்டா கூறு கையில், “வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் மக்களுக்கி டையேயான உறவுகள் போன்ற துறைகளில் இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளன. இன்றைய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இதுவரை செய்யப்பட்ட மிகவும் அற்புதமான ஒப்பந்தங்களில் ஒன்றாகும்” என்றார். ஐரோப்பிய ஆணைய





**பிரதமர் நரேந்திர மோடி, ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அந்தோனியோ கோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் முன்னிலையில் தடையற்ற வர்த்தக ஒப்பந்த ஆவணங்களை பரிமாறிக்கொண்ட மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் (வலது) மற்றும் ஐரோப்பிய வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு ஆணையர் மாரோஸ் செஃப்கோவிக்.**

தலைவர் வான் டெர் லேயன் கூறுகையில், “நாங்கள் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாயான ஒப்பந்தத்தை வழங்கி உள்ளோம். நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு ஈடுபாட்டின் ஒட்டுமொத்த பாதையை கணிசமாக விரிவுபடுத்தும். பல துறைகளில் ஒத்துழைப்பு க்கான புதிய வாய்ப்புகளை திறக்கும்” என்றார்.

## கிடைக்கக்கூடிய நன்மைகள்:

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் ஜவுளி, ஆடைகள், கடல்சார் பொருட்கள், ரசாயனங்கள், பிளாஸ்டிக், ரப்பர், தோல், காலணிகள், அடிப்படை உலோகங்கள், ரத்தினங்கள், நகைகள், பொம்மைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றுக்கான வரி முற்றிலும் நீக்கப்படும். தற்போது, இந்தத் துறைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் 0 முதல் 26 சதவீதம் வரை வரிகள் விதிக்கப்படுகின்றன.

●ஆட்டோமொபைல் மற்றும் எஃகு தவிர, இந்தியாவிலிருந்து வரும் கிட்டத்தட்ட அனைத்து இந்தியப் பொருட்களுக்கும் (93 சதவீதத்திற்கும் மேல்) ஐரோப்பிய ஒன்றியத்தில் பூஜ்ஜிய வரி அனுமதி கிடைக்கும். மீதமுள்ள 6 சதவீதத்திற்கும் மேலான பொருட்களுக்கு, வரி குறைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அடிப்படையிலான வரிச் சலுகைகளை (ஆட்டோ மொபைல்கள் போன்ற பொருட்களுக்கு) ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும்.

●ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்கள் மற்றும் ஒயின்களுக்கு இந்திய சந்தையில் சலுகை வரி விகிதங்கள் வழங்கப்படும். இதன் மூலம் அவற்றின் விலைகள் குறையும். ஐரோப்பிய ஒன்றிய வாகன உற்பத்தி நிறுவனங்களில் உயர்தர அதிக விலை கொண்ட கார்களை இந்தியாவில் அறிமுகப்படுத்த அனுமதிப்பது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் 'மேக் இன் இந்தியா' திட்டத்தில் அத்தகைய கார்கள் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்புகளைத் திறக்கும். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தானியங்கி வாகனங்களுக்கும் வாய்ப்புகளைத் திறந்துவிடும்.

● இந்திய ஏற்றுமதிகளில் 99 சதவீதத்திற்கும் அதிகமானவை ஐரோப்பிய ஒன்றியத்தில் முன்னுரிமை நுழைவை பெறும். இது மிகப்பெரிய வளர்ச்சி சாத்தியங்களுக்கு வழிவகுக்கும்.

● சேவைகள் துறையில், ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவுக்கு சிறந்த சலுகயை வழங்கியுள்ளது. மொத்தமுற்ற 155 துணைத் துறைகளில் 144 துறைகளில் கால் பதிக்க இந்தியாவுக்கு அனுமதி வழங்கி உள்ளது. மேலும் இந்தியாவும் அவர்களுக்கு 102 துணைத் துறைகளைத் திறந்துவிடுகிறது.

● ஐரோப்பிய ஒன்றியத்தின் சராசரி வரி சுமார் 3.8 சதவீதமாக உள்ள நிலையில், இந்த வர்த்தக ஒப்பந்தத்திற்குப் பிறகு 0.1 சதவீதமாகக் குறைக்கப்படும்.

● ஐரோப்பிய ஒன்றியத்தி லிருந்து உயர் தொழில்நுட்ப சேவைகளையும் முத லீடுகளையும் இந்தியாவிற்கு கொண்டு வரும், இதன் விளைவாக இரு தரப்பி னருக்கும் நன்மை பயக்கும்.

● பாரம்பரிய மருத்துவ நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்படாத ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், இந்திய பாரம்பரிய மருத்துவப் பயிற்சியாளர்கள் தங்கள் சொந்தப் பெயரில் பணிபுரிவதற்கான அணுகலை இந்தியா பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், 27 நாடுகளைக் கொண்ட அந்த கூட்டமைப்பிற்கு இந்தியாவின் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும். இது இந்திய ஏற்றுமதியை பன்முகப்படுத்தப்படும் ஒன்றிய அரசின் நடவடிக்கை யில் முக்கியத்துவம் பெறுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகளைத் திறந்து, பெண்கள், கைவினைஞர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். மாணவர்களின் இடப்பெயர்வு தொடர்பான உறுதிமொழிகளும் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளன. படிப்புக்குப் பிந்தைய பணி விசாக்கள் தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து சில உறுதிமொழிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய இறக்குமதி பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீத வரி விதித்துள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானதாக பார்க்கப்படுவதாக ஒன்றிய அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒயின் விலை குறையும்

இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், ஐரோப்பிய ஒன்றிய ஒயின்களுக்கான வரி 150 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறையும் (விலையுயர்ந்த ஒயின்களுக்கு). இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு முக்கிய கோரிக்கையாக இருந்தது. இதன் மூலம் ஐரோப்பிய ஒயின்களின் விலை இந்தியாவில் குறையும். 2.5 யூரோக்களுக்கும் குறைவான விலை கொண்ட ஒயின்களுக்கு எந்த வரிச் சலுகைகளும் இருக்காது. இந்திய ஒயின்களுக்கும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் வரிச் சலுகைகள் கிடைக்கும்.

## இருதரப்பு வர்த்தகம்

2024-25 நிதியாண்டில், ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்தியாவின் மொத்தப் வர்த்தகம் சுமார் 136 பில்லியன் டாலர். இதில் ஏற்றுமதி 76 பில்லியன் டாலராகவும், இறக்குமதி 60 பில்லியன் டாலராகவும் இருந்தது. 2004ம் ஆண்டு முதல் இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் நெருங்கிய வர்த்தக உறவு கொண்ட நாடுகளாக உள்ளன.

## 19வது வர்த்தக ஒப்பந்தம்

இது இந்தியாவின் 19வது வர்த்தக ஒப்பந்தம். 2014 மேற்கொள்ளப்பட்ட 8வது வர்த்தக ஒப்பந்தம். 2021ல் மொரீஷியஸ், 2022 டிசம்பரில் ஆஸ்திரேலியா, 2022 மே மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகம், 2025 டிசம்பரில் ஓமன், 2025 ஜூலையில் இங்கிலாந்து, 2025 அக்டோபரில் ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் (சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து, லிச்சென்ஸ்டைன், நார்வே நாடுகள் கொண்ட அமைப்பு) ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 2025ல் நியூசிலாந்துடன் வர்த்தக பேச்சுவார்த்தைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

## சலுகை இல்லாத பொருட்கள்

இந்த ஒப்பந்தத்தில், உள்நாட்டு விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு, பால் பொருட்கள் (சீஸ் உட்பட), சோயா மாவு மற்றும் தானியங்கள் துறைகளில் இந்தியா எந்த வரிச் சலுகைகளையும் வழங்காது. அதே போல, ஐரோப்பிய ஒன்றியமும் சர்க்கரை, மாட்டிறைச்சி, இறைச்சி மற்றும் கோழிப் பண்ணைத் துறைகளைப் பாதுகாக்கிறது.

## சொகுசு கார்கள் விலை குறையும்

அடுத்த ஆண்டு முதல் இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தவுடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் தயாரிக்கப்படும் பிஎம்டபிள்யூ, மெர்சிடிஸ், லம்போர்கினி, போர்ஷே மற்றும் ஆடி போன்ற பிரீமியம் சொகுசு ஐரோப்பிய கார்கள், இந்திய சந்தையில் மலிவான விலையில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா ஒதுக்கீட்டின் அடிப்படையில் இறக்குமதி வரிச் சலுகைகளை வழங்க உள்ளது. தற்போது, வாகனத் துறையில் இந்தியாவின் இறக்குமதி வரி 66 சதவீதம் முதல் 125 சதவீதம் வரை உள்ளது. இந்தியாவின் வாகன உற்பத்தி துறை பெரும்பாலும் சிறிய கார்களால் (ரூ. 10 லட்சம் - ரூ. 25 லட்சம்) ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இது வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, ரூ.25 லட்சத்திற்கு அதிகமான ஐரோப்பிய கார்களுக்கு மட்டுமே சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய கார் உற்பத்தியாளர்கள் இந்தியாவில் அவர்களின் உற்பத்தி தளங்களை அமைக்கவும் ஒப்பந்தத்தில் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் முன்னணி கார் நிறுவனங்கள் இந்தியாவில் கால் பதிக்கும் வாய்ப்புள்ளது.

## வரலாறு காணாத உச்சத்தை நோக்கி நகரும் தங்கம்:

# பவுன் விலை ரூ.1.34 லட்சம் தாண்டியது

### வெள்ளியும் தொடர்ந்து உயர்வு



**விலை உயர்ந்த பாதை**

| ஆண்டு | விலை |
|---|---|
| 1920 | ரூ.21 |
| 1980 | ரூ.1,000 |
| 2001 | ரூ.3,000 |
| 2006 | ரூ.7,160 |
| 2010 | ரூ.13,976 |
| 2015 | ரூ.20,352 |
| 2019 | ரூ.26,424 |
| 2020 | ரூ.31,176 |
| 2024 | ரூ.50,000 |
| **2025** | |
| ஜனவரி | ரூ.60,000 |
| ஏப்ரல் | ரூ.70,000 |
| செப். | ரூ.80,000 |
| அக். | ரூ.97,600 |
| டிசம்பர் | ரூ.1,00,120 |
| நேற்று | ரூ.1,34,400 |

தங்கம் விலை கடந்த சில ஆண்டுகளாகவே வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த 2025 ஜன.3-ம் தேதி 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு பவுன் விலை ரூ.58,080 ஆக இருந்தது. படிப்படியாக உயர்ந்த தங்கம் விலை கடந்த டிச.15-ம் தேதி ரூ.1 லட்சத்தை தாண்டியது.

அமெரிக்க அதிபராக டிரம்ப் 2-வது முறையாக பொறுப்பேற்ற பிறகு வெளியிட்ட அறிவிப்புகள், குறிப்பாக, இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிப்பு, எச்1பி விசா கட்டணத்தை உயர்த்தியது, அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு ஆகியவை தங்கம் விலை உயர்வுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

2026-ம் ஆண்டு தொடக்கம் முதலே தங்கம் விலை உயர்ந்து வந்தது. சென்னையில் நேற்று முன்தினம் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை ஒரு கிராம் ரூ.15,610, ஒரு பவுன் ரூ.1,24,880 ஆக இருந்தது. கிலோ வெள்ளி விலை ரூ.4 லட்சமாக இருந்தது.

இந்நிலையில், வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு சென்னையில் ஆபரணத் தங்கம் விலை நேற்று அதிகரித்தது. நேற்று ஒரே நாளில் கிராமுக்கு ரூ.1,190 என பவுனுக்கு ரூ.9,520 அதிகரித்தது. இதனால், கிராம் விலை ரூ.16,800, பவுன் விலை ரூ.1,34,400 என அதிகரித்து புதிய உச்சத்தை பதிவு செய்தது. 24 காரட் சுத்த தங்கம் விலை ரூ.1,46,616 ஆக இருந்தது.

வெள்ளி விலையும் உயர்ந்தது. நேற்று முன்தினம் வெள்ளி ஒரு கிராம் ரூ.400, ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.4,00,000 இருந்த நிலையில், நேற்று வெள்ளி கிராமுக்கு ரூ.25 என கிலோவுக்கு ரூ.25,000 உயர்ந்தது. இதனால், வெள்ளி ஒரு கிராம் ரூ.425, ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.4,25,000 என உயர்ந்தது. வரலாறு காணாத அளவுக்கு தங்கம், வெள்ளி விலை உயர்ந்ததால், சுபகாரியங்களுக்கு நகை வாங்க திட்டமிட்டுள்ளவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

விலை உயர்வு குறித்து சென்னை தங்க, வைர நகை வியாபாரிகள் சங்க பொதுச் செயலாளர் எஸ். சாந்தகுமார் கூறியதாவது: ஈரானில் போர் பதற்றம், சர்வதேச பொருளாதார வீழ்ச்சி போன்ற காரணங்களால் பெரும் முதலீட்டாளர்களின் பார்வை, பாதுகாப்பான முதலீடாக கருதப்படும் தங்கத்தின் பக்கம் திரும்பியுள்ளது. இதுதவிர, மத்திய பட்ஜெட் பிப்.1-ம் தேதி தாக்கல் செய்யப்படும் நிலையில், அதில் தங்கம் தொடர்பான அறிவிப்புகள் ஏற்படுத்தியுள்ள எதிர்பார்ப்பு போன்றவற்றால் தங்கம் விலை உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பொருளாதார நிபுணர்கள் கூறியபோது, ''அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசின் செயல்பாடுகளால் தென் கொரியா, டென்மார்க் உள்ளிட்ட நாடுகள் டாலர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகள் டாலரை விற்றுவிட்டு, தங்கத்தில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளன. இதன் விளைவாகவே, கடந்த ஒரு மாதத்தில் மட்டுமே தங்கம் விலை 25 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சீனா வெள்ளியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாததால், உலக சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், வெள்ளி விலை அதிகரிக்கிறது'' என்றனர்.

### 53 முறை புதிய உச்சம் தொட்ட தங்கம்:

உலக தங்க கவுன்சில் தகவல் - தங்கம் விலை உயர்வு மற்றும் நுகர்வோரின் வாங்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இந்தியாவில் தங்கத்தின் தேவை குறைந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த 2024-ல் 802.8 டன்னாக இருந்த தங்கத்துக்கான தேவை 2025-ல் 11 சதவீதம் குறைந்து 710.9 டன்னாக சரிந்துள்ளது. நடப்பு 2026-ம் ஆண்டில் இதன் தேவை 600 முதல் 700 டன்களாக மட்டுமே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அளவு அடிப்படையில் தேவை குறைந்தாலும், விலை உயர்வால் தங்கத்தின் மதிப்பு பலமடங்கு அதிகரித்துள்ளது. 2024-ல் ரூ.5,75,930 கோடியாக இருந்த தங்கத்தின் மதிப்பு, 2025-ல் 30 சதவீதம் உயர்ந்து ரூ.7,51,490 கோடியாக அதிகரித்துள்ளது.

2024 ஜனவரியில் 10 கிராம் தங்கம் ரூ. 70,754 ஆக இருந்த நிலையில், 2025 ஜனவரி 1-ல் விலை 67 சதவீதம் உயர்ந்து ரூ. 1,01,572 ஆக அதிகரித்தது. 2025-ல் மட்டும் தங்கம் விலை 53 முறை புதிய உச்சத்தை தொட்டுள்ளது என்று உலக தங்க கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒன்றிய பட்ஜெட்டில் பெயரளவுக்கு கூட வளர்ச்சி திட்டம் இல்லை

# தமிழக மக்கள் மீது பாஜவுக்கு கடும் வெறுப்பு

## திண்டிவனம் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு

தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும் பாஜவுக்கு கடும் வெறுப்பு இருப்பதால், ஒன்றிய பட்ஜெட்டில் பெயரளவுக்கு கூட வளர்ச்சி திட்டம் இல்லை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டி உள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் சிப்காட்டில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில், ரூ.390 கோடியே 44 லட்சம் செலவிலான 199 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.254 கோடியே 29 லட்சம் மதிப்பீட்டிலான 24 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 13,879 பயனாளிகளுக்கு ரூ.43 கோடியே 75 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், ''உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் 10,000 முகாம்கள் நிறைவையொட்டி, இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், 1 லட்சத்து 82 ஆயிரத்து 967 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட உதவித் தொகைகளையும் வழங்கினார். இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் "என் கனவு, என் எதிர்காலம்" என்ற திட்டத்தின் புதிய இணையதளத்தை தொடங்கி வைத்தார். பின்னர், விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 13879 பேருக்கு ரூ.43 கோடியே 74 லட்சத்து 92 ஆயிரத்து 950 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கிய முதலமைச்சர், ரூ.60 கோடியில் கட்டப்பட்ட அரசு தலைமை மருத்துவ மனையும், திண்டிவனம் மக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையான இந்திராகாந்தி புதிய பேருந்து நிலையத்தையும், மேடையிலிருந்தபடியே காணொலி காட்சி மூலம் திறந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணி த்தார். தொடர்ந்து, உங்களுடன் ஸ்டாலின் முகாம் குறி த்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மற்றும் 2 பயனாளிகளுடன் வீடியோ கான்பரன்ஸ் மூலம் கலந்துரையாடினார்.

பின்னர் தமிழக முதலமை ச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த சட்டமன்ற தேர்தலின்போது தொலைநோக்கு பார்வை யோடு தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளில் வழங்கிய பெரும்பாலானவற்றை நிறைவேற்றியும், வாக்குறுதி யில் சொல்லப்படாத சில திட்டங்களை முத்திரை திட்டங்களாக செய்து கொடுத்தும், தமிழ்நாட்டு மக்களுடைய கனவுகளை நிறைவேற்றி வருகிறோம். திராவிட முன்னேற்ற கழகத்தை பொறுத்த வரைக்கும் சட்டங்களையும், பெரிய திட்டங்களையும் நிறை வேற்றுவது மட்டுமல்ல. தமிழ்நாட்டின் மக்களின் ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்றுகிறோம்.

அதற்காக தான் 2021 சட்டமன்ற தேர்தலுக்கு முன் தமிழ்நாட்டில் இருக்ககூடிய 234 தொகுதிகளுக்கும் உங்களுடைய குறைகளை கேட்டு கோரிக்கைகளை மனுக்களாக வாங்கியிருக்கிறேன். இந்த பயணத்தில் கோரிக்கை மனுக்களை மட்டும் வாங்கவில்லை. தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையும் பெற்று திராவிடமாடல் அரசு அமைத்தோம். அந்த மனுக்களை எல்லாம் 100 நாட்களுக்குள் தீர்த்து வைக்கவேண்டும் என





முதலமைச்சராக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற ஒரு புது துறையை உருவாக்கினேன்.

இந்த துறை மூலமாக மக்களிடம் இருந்து வாங்கிய 4,57,645 மனுக்களுக்கு 100 நாட்களில் தீர்வு கண்டோம். அந்த 100வது நாளிலே அதாவது ஆகஸ்ட் 2021 14ம் நாள் தலைமை செயலகத்தில் சிறப்பு விழா நடத்தி 32,283 பேருக்கு பட்டாவும், 30,455 பேருக்கு சமூக பாதுகாப்பு திட்ட ஓய்வூதியமும் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல 19,664 வளர்ச்சி திட்ட பணிகளுக்காக ஒப்புதல் ஆணையும், 9,444 வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவியும், 554 கோடியே 27 லட்ச ரூபாய் செலவிலான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான ஆணையும் வழங்கினேன்.

மக்களுடைய குறைகளை தேவைகளை, உன்னிப்பாக கவனித்து விரைவாக நாம் திராவிட மாடல் அரசு நிறைவேற்றியுள்ளது.

இது மக்களிடம் நம்பிக்கையும், எதிர்பார்ப்பையும் அதிகமாக்கியது. தொடர்ச்சியாக முதலமைச்சரின் தனிப்பி ரிவு, முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் ஆகிய 3 துறைகளை ஒருங்கிணைத்து முதல்வரின் முகவரி, உங்களுடன் ஸ்டாலின், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்கள், ஓய்வூதியம், வாட்ஸ் அப்பில் அரசு சேவை, உங்கள் கனவு சொல்லுங்க திட்டத்தை தொடங்கி வைத்தேன்.

இப்படி நாம் ஒருபக்கம் தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக திட்டமிட்டு வந்தோம் என்றால், ஒன்றிய அரசும், அதனுடைய கூட்டாளிகளும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை கெடுக்க அனைத்து செயல்களும் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

அதற்கு சமீபத்திய உதாரணம் தான் சமீபத்தில் ஒன்றிய அரசு வெளியிட்ட பட்ஜெட். இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எதுவும் இல்லை. ஒப்புக்காவது இதுவரை ஏதாவது சொல்லி வந்தார்கள். அதுவும் இந்த ஆண்டு இல்லை. பேருக்குகூட தமிழ்நாட்டுக்கு எந்த வளர்ச்சி திட்டமும் இல்லை. நம் பல ஆண்டு கோரிக்கைகள் எதுவும் இல்லை.

பொதுவாக தேர்தல் நடக்கின்ற மாநிலங்களுக்கு அந்த ஆண்டு பட்ஜெட்டில் பணம் ஒதுக்குவது அவர்களது தந்திரமாக இருக்கும். பீகார், ஒடிசா, ஆந்திரா அந்த மாநிலங்களுக்கு எல்லாம் அப்படிதான் நிதி ஒதுக்கினாங்க. இப்போது தமிழ்நாட்டுக்கு தேர்தல் வரப்போகிறது. ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களுக்கு பண்ணுவது கூட நம் மாநிலத்திற்கு பண்ணவில்லை. அந்த அளவுக்கு தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும் அவர்களுக்கு வெறுப்பு. இந்தியாவிலேயே 2வது இடத்தில் தமிழ்நாடு தான் இருக்கிறது. அதிக தொழிற்சாலை கொண்ட நாடு நம்நாடு.

இப்படிப்பட்ட மாநிலத்தில் புதிய நெடுஞ்சாலைகள், புதிய வழித்தடங்கள், மெட்ரோ ரயில்கள், உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுது. ஆனால் ஒன்றிய அரசுக்கு வரி வருவாயை வாரி வழங்குகின்ற நம் தமிழ்நாட்டிற்கு மிக மிக சொற்பமான பங்கை தான் திருப்பி தராங்க. 11 ஆண்டுகளாக சிறப்பு திட்டம் வழங்காமல் வஞ்சிக்கிறாங்க. ஒருவேளை தேர்தல் ரிசல்ட் தெரிந்து நாம் தோக்கதானே போகிறோம்.

இப்படி நடந்துகொள்கிறார்களோ என்னவோ. உண்மை தான் நாம்தான் வெற்றி போகிறோம். அடுத்து அமைய போகிறது உங்கள் திராவிடல் மாடல் 2.0 அரசு தான். இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றுவோம். உங்கள் கனவுகளை நிச்சயம் இந்த முத்துவல் கருணாநிதி ஸ்டாலின் நிறைவேற்றியே தருவான். இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்றுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## விமானம் நொறுங்கி தீப்பிடித்ததில் மகாராஷ்டிர மாநில துணை முதல்வர்

# அஜித் பவார் உட்பட 5 பேர் உயிரிழப்பு

### குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடி, முதல்வர் பட்னாவிஸ் இரங்கல்





மகாராஷ்டிர மாநிலம் புனேவில் நேற்று நடைபெற்ற விமான விபத்தில் துணை முதல்வரும், தேசியவாத காங்கிரஸ் தலைவருமான அஜித் பவார் (67) உட்பட 5 பேர் உயிரிழந்தனர். அவரது மறைவுக்குக் குடியரசுத் தலைவர், பிரதமர், முதல்வர் உட்பட தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

மகாராஷ்டிர மாநில துணை முதல்வர் அஜித் பவார் நேற்று காலை 8.10 மணிக்கு மும்பை விமான நிலையத்தில் இருந்து பாராமதிக்கு ‘லியர்ஜெட் 45’ என்ற சிறிய ரக விமானத்தில் பயணம் செய்தார். இது டெல்லியைச் சேர்ந்த விஎஸ்ஆர் வென்சர்ஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு சொந்தமானது. பம்பார்டியர் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் தயாரிப்பான லியர்ஜெட் 45 விமானத்தில் அஜித் பவாரின் பாதுகாப்பு அதிகாரி விதிப் ஜாதவ், பைலட்கள் சுமித் கபுர், சம்பவி பதக், விமான உதவியாளர் ஆகிய 4 பேர் சென்றனர்.

மும்பையில் இருந்து பாராமதி 256 கி.மீ. தொலைவில் உள்ளது. விமானத்தில் 45 நிமிடத்தில் செல்லலாம். நேற்று காலை 8.18 மணியளவில் பாராமதி விமான நிலையத்தின் ஓடுபாதை பனிமூட்டத்தால் தெரியவில்லை. விமானக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டு

அவர்கள் அளித்த உத்தரவின்படி விமானத்தை பைலட் தரையிறக்க 2 முறை முயற்சி செய்தார். மூன்றாவது முறையாக 8.43 மணிக்கு விமானம் தரையிறங்க அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பிறகு விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதேநேரத்தில் 8.44 மணியளவில் விமான நிலைய ஓடு பாதையில் இருந்து 100 மீட்டர் தொலைவில் விமானம் தரையில் மோதி வெடித்தது.

இதையடுத்து மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, விமானத்தில் இருந்த 5 பேரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், அவர்கள் தீக்காயத் தால் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மகாராஷ்டிர உள்ளாட்சி தேர்தலில் அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி, சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது. பிப்ரவரி 5-ம் தேதி 5 ஜில்லா பரிஷத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க அவர்

# கருப்பு பெட்டி கண்டுபிடிப்பு: விசாரணை நிலவரம் என்ன?

விபத்துக்கான காரணத்தை கண்டறிய மத்திய விமான போக்குவரத்து துறை உயர்நிலை விசாரணை நடத்த வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், மத்திய விமான போக்குவரத்து துறைக்கு கடிதம் அனுப்பினார்.



இந்த கடிதத்துக்கு பதில் அளித்து முதல்வர் பட்னாவிஸுக்கு மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு நேற்று அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: ”விமான விபத்து தொடர்பாக மத்திய விமான போக்குவரத்து துறையின் கீழ் இயங்கும் விமான விபத்து புலனாய்வு பிரிவு (ஏஏஐபி) ஏற்கெனவே விசாரணையை தொடங்கிவிட்டது. ஏஏஐபி மற்றும் டிஜிசிஏ புலனாய்வு குழுக்கள் விமான விபத்து நேரிட்ட இடத்தில் ஆய்வு நடத்தி உள்ளன. கருப்பு பெட்டி மீட்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

விமான விபத்து தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் விசாரணை நடத்தப்படும். தொழில்நுட்ப தரவுகள், விமானத்தின் இயக்கம், விபத்து நேரிட்ட பகுதி என அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தப்படும். எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர அரசு கோரிக்கை விடுத்திருக்கிறது. இதை கவனமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒத்துழைப்பு தேவை: விமான விபத்து குறித்து விரைவாக விசாரணை நடத்த மகாராஷ்டிர மாநில அரசின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். குறிப்பாக உள்ளூர் நிர்வாகம், எங்களது புலனாய்வு அமைப்புகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

கருப்பு பெட்டி கண்டுபிடிப்பு: மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் அஜித் பவார் பயணம் செய்த லியர் ஜெட் 45 விமானம் விபத்துக்குள்ளானது குறித்து விமான விபத்து புலனாய்வு அலுவலகம் (ஏஏஐபி) விசாரணையை தொடங்கியுள்ளது.

விசாரணை விரைவாக நடைபெறுவதாகவும், விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதில் உள்ள தகவல்கள் வெளியான பின்பு, விமான விபத்துக்கான காரணம் தெரியவரும்.

விமான விபத்து விசாரணைக்காக டெல்லி மற்றும் மும்பையில் இருந்து சென்ற ஏஏஐபி அதிகாரிகள் விபத்து நடந்த இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

பாராமதி தொகுதிக்கு விமானத்தில் சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மறைந்த அஜித் பவாருக்கு சுனேத்ரா பவார் என்ற மனைவியும், ஜெய், பார்த் பவார் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

**3 நாள் துக்கம்:** அஜித் பவார் மறைவை முன்னிட்டு மகாராஷ்டிராவில் நேற்று முதல் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. அங்கு தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. நாளை வரை அரசு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரின் அண்ணன் மகன்தான் அஜித் பவார். முதன் முதலில் 1991-ல் பாராமதி மக்களவை தொகுதி எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் தொடர்ந்து 5 முறை தொகுதியை அவர் தக்கவைத்தார். பல்வேறு அரசுகளின் கீழ் 6 முறை துணை முதல்வராக இருந்துள்ளார். மகாராஷ்டிராவில் நீண்ட காலம் துணை முதல்வராக இருந்தவர் அஜித் பவார்.

அஜித் பவார் மறைவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்டிர முதல்வர் பட்னாவிஸ் அளித்த பேட்டியில், “அஜித் பவாரின் இழப்பை நம்ப முடியவில்லை. நல்ல நண்பரை இழந்துவிட்டேன். அவரது இடத்தை யாரும் நிரப்ப முடியாது. மகாராஷ்டிர பிரச்சினைகளை நன்கு அறிந்த மக்கள் தலைவர். இதுபோன்ற தலைமையை உருவாக்க பல ஆண்டுகள் ஆகும்” என்றார்.

**விசாரணை:** அஜித் பவார் மரணம் குறித்து மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே கூறுகையில், “அஜித் பவார் உள்ளிட்ட ஐவர் உயிரிழப்புக்குக் காரணமான விமான விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும். அவர் எனக்கு மூத்த சகோதரர் போன்றவர். அவரது மறைவு மகாராஷ்டிராவுக்கு ஒரு பேரிழப்பு. இந்த நாள் மகாராஷ்டிராவுக்கு ஒரு கருப்பு நாள். இதுபோன்ற ஒரு துயர சம்பவம் மீண்டும் நிகழாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்” என்றார்.

**இறுதிச் சடங்கு:** அஜித் பவாரின் உடலுக்கு பாராமதியில் உள்ள வித்ய பிரதிஸ்தன் மைதானத்தில் இன்று காலை 11 மணிக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உட்பட அரசியல் கட்சி தலைவர்கள் பலர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளுமன்ற மக்களவையில் அஜித் பவார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

# தொகுதி பங்கீடு குறித்து

# கூட்டணி கட்சிகளுடன் பேச திமுக குழு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

திமுக கூட்டணி கட்சிகளுடன் விரைவில் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை தொடங்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்ரல் மாதம் இறுதியில் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான அறிவிப்பு இந்த மாதம் இறுதியில் அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கு இன்னும் குறுகிய நாட்களே உள்ளதால் அனைத்து அரசியல் கட்சிகளும் முழுவீச்சில் களத்தில் இறங்கியுள்ளன.

இந்த முறை தமிழகத்தில் 4 முனைப்போட்டி நிலவுவது உறுதியாகியுள்ளது. ஆளுங்கட்சியான திமுக தலைமையில் ஒரு அணி, அதிமுக தலைமையில் மற்றொரு அணி, தவெக தலைமையில் இன்னொரு அணி, சீமான் தலைமையில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டி என 4 முனைப்போட்டி நிலவுகிறது. திமுக பலம்வாய்ந்த கூட்டணியுடன் களம் காண இருக்கிறது. கடந்த தேர்தலில் திமுகவுடன் கூட்டணி அமைத்த அதே கட்சிகள் மீண்டும் இடம் பெற்றுள்ளன.

அதாவது காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மதிமுக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. கூடுதலாக நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யமும் கைகோர்த்துள்ளது. இன்னும் சில கட்சிகள் வர உள்ளன. அதே நேரத்தில் அதிமுக தலைமையிலான அணியில் பாஜ, பாமக (அன்புமணி) அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.



தேர்தலை சந்திக்கும் வகையில் திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடங்கி நடத்தி வருகிறார். மேலும் தேர்தல் கதாநாயகன் என்று சொல்லப்படும் தேர்தல் அறிக்கை தயாரிக்க திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்பி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அனைத்து தரப்பினரையும் சந்தித்து கருத்துகளை கேட்டு திமுக தேர்தல் அறிக்கையை தயாரிக்க உள்ளது.

இதற்காக இந்த குழு மாவட்ட வாரியாகசென்று கருத்துகளை கேட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் திமுக சார்பில் அடுத்தடுத்து பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரை 234 தொகுதிகளிலும் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த பிரசாரம் இந்த மாதம் முழுவதும் நடக்கிறது. இதே போல அதிமுக சார்பில் பொதுச்செயலாளர் எடப்பாடியும் பிரசாரத்தில் இறங்கியுள்ளார்.

அதே நேரத்தில் தொகுதி கூட்டணிக்கு தலைமை வகிக்கும் கட்சிகள் இதுவரை தொகுதி பங்கீடு, எந்தெந்த தொகுதி என்பது குறித்து பேச்சுவார்த்தையை அதிகாரப்பூர்வமாக தொடங்கவில்லை. தேர்தல் தேதி நெருங்குவதால் விரைவில் இந்த பேச்சுவார்த்தையை

# டெல்லியில் ராகுல் காந்தியுடன் கனிமொழி திடீர் சந்திப்பு

டெல்லியில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை, திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி நேற்று சந்தித்து பேசினார்.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் வெற்றி பெற்றால் ஆட்சியில் பங்கு வேண்டும் என்று ஆளும் திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர். இதுதொடர்பாக திமுக - காங்கிரஸ் பிரமுகர்களிடையே கருத்து மோதல்கள் எழுந்துள்ளன.

காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், ''கூட்டணி பேச்சு தொடர்பாக திமுகவின் பதிலுக்கு 2 மாதமாக காத்திருக்கிறோம். கூட்டணிப் பேச்சு இதுவரை தொடங்கவில்லை. திமுக தரப்பில் ஏன் இவ்வளவு தாமதம் என தெரியவில்லை'' என்று கூறியிருந்தார்.

ஏற்கெனவே, காங்கிரஸ் - திமுகவினரிடையே கருத்து மோதல் நிலவும் நிலையில், கிரிஷ் சோடங்கரின் கருத்து தமிழகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியது. மேலும், தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளில் சிலர், நடிகர் விஜய்யின் தவெகவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் எனவும் கூறி வருகின்றனர்.



இந்நிலையில், டெல்லி யில் குடியரசுத் தலைவர் உரையுடன் மக்களவை கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. அதில் பங்கேற்ற பின் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்து பேசினார். சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்ற இந்த சந்திப்பில், கூட்டணி விவகாரம், தொகுதி பங்கீடு, தேர்தல் அறிக்கையில் தேசிய அளவிலான அம்சங் களை சேர்ப்பது, நிர்வாகிகளின் மோதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது, தமிழகத்தில் கடந்த தேர்தலில் 25 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில், இந்த முறை கூடுதல் தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. அதற்கு கூட்டணி பேச்சு வார்த்தைக்கான திமுக குழு விரைவில் அமைக்கப்பட்டு, தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படும். கருத்து வேறுபாடுகளை மறந்து 2 கட்சிகளும் தமிழகத் தேர்தலில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று ராகுலிடம் கனிமொழி கேட்டுக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

திமுக - காங்கிரஸ் கூட்டணி யில் நிலவும் சர்ச்சையான சூழலில், இந்த சந்திப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

---

கட்சிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னரே கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு எத்தனை இடம், எந்த தொகுதி என்பது தெரியவரும்.

இந்நிலையில் விரைவில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை தொடங்கும் என்று திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அளித்த பேட்டியில், தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய பட்ஜெட் பெரிய ஏமாற்றம் அளித்துள்ளது. வரும் சட்டமன்றத் தேர்தலில் பாஜவுக்கு மக்கள் பாடம் கற்பிப்பார்கள்" என்றார்.

தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில் வருமாறு: கூட்டணி பேச்சுவார்த்தை எப்போது தொடங்கும்? விரைவில் கூட்டணிப் பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட்டு, கூட்டணி பேச்சு வார்த்தை தொடங்கும். தேர்தல் கருத்து கணிப்புகள் திமுகவுக்கு சாதகமாக உள்ளதே? நீங்களும் சாதகமாக இருங்கள். புதிய எதிரிகளுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? நாங்கள் யாரையும் எதிரியாக பார்க்கவில்லை. இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்




அதில் இருந்தவர்கள் எல்லாரும் அதில் ஒருவர் நம்பிக்கை சொல்லினார்.

“பஸ் போனால் ஏம்பா, எதற்கு போய் வருத்தப்படுறீங்க? வாங்க, தெரிஞ்சவங்க கிட்ட வண்டி ஏதாவது இருக்கான்னு பார்த்து, சீக்கிரமா கூட்டிக்கிட்டு போய் பார்க்கலாம் ஆஸ்பத்திரிக்கு,” என்றார்கள்.

அருகில் இருந்தவர் சொன்னார், “மாட்டு வண்டியா பார்க்கலாமா? இல்லன்னா ரவி மளிகைக் கடையோட மூணு சக்கர வண்டி, ட்ரை சைக்கிள் அது இருக்கு, அதை கேட்கலாமா?” என்றார்.

அதற்கு கூட இருந்தவர்கள் சொன்னார்கள், “ஏய், மாட்டு வண்டியோ, குதிரை வண்டியோ, ரவி மளிகைக் கடையில இருக்கிற மூணு சக்கர வண்டியோ, ட்ரை சைக்கிளோ ஏதாவது இருந்தா என்ன? அவசரத்துக்கு கூட்டிட்டு போலாம்,” என்று.

அவர் சொல்லி வாய் திறந்து மூடும் முன்னே அதில் ஒருவர் சொன்னார்,

“ஏய், என்ன சொன்ன? மாட்டு வண்டி, குதிரை வண்டி, ரவியோட மளிகைக் கடை வண்டியா? அடடா ஏப்பா, இந்த யோசனை யாருக்கும் முதல்லே வராம போச்சே! போச்சப்பா!

என்ன என்ன... ரவியோட மளிகைக் கடை மூணு சக்கர வண்டி, ட்ரை சைக்கிள்னு சொல்ற?”



என்றார் ஒருவர்.

“அதெல்லாம் ஒன்னும் இல்லப்பா. நான் சொல்ற வண்டியே வேற.”

“அப்படியா? என்ன வண்டின்னு சொல்லு... சொல்லுங்கப்பா, சீக்கிரமா,” என்றார்கள்.

“ஏய், நம்ம பண்ணையார் வீட்டுல குதிரை வண்டி இருக்குப்பா!”

“அட மொட்டை முனியா! உனக்கு இருக்கிற ஒரு யோசனை கூட எங்களுக்கு வராம போச்சாடா. அட மொட்டை முனியா, மொட்டை முனியா... அதுக்குத்தான் இந்த மொட்டை முனியனை பக்கத்துல வச்சுக்கணும்,” என்று முனியன் என்பவன் தலையைத் தடவிக் கொடுத்தான்.

அருகில் இருந்த ஒருவன், “உடனே எல்லோரும் வாங்கப்பா, வாங்கப்பா!”

“ஆமாப்பா, இதைக் கூட மறந்துட்டீங்களே அப்பா!”

“ஆமாப்பா, ஆமா அப்பா, ஆமாப்பா. அவசரத்துல காலும் ஓடல, கையும் ஓடல,” என்றார் ஒருவர்.

அதற்கு அருகில் இருந்தவர் சொன்னார்,

“இதெல்லாம் என்னைக்குடா தனித்தனியா ஓடுச்சு? இது யாருக்குமே தனித்தனியா ஓடலையேடா! உனக்கு மட்டும் என்ன, இதெல்லாம் தனித்தனியா ஓடுமா?”

“ஐயா, நான் ஒரு இதுக்காக சொன்னேன் ஐயா.”

“ஆமா ஐயா, உனக்கு காலும் ஓடல, கையும்

ஓடல. இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு பாரு, இந்தப் பக்கம் ரெண்டு மூணு கழுதைங்க இப்படி ஓடும். அதுக்கு கால் ஓடுதா, கை ஓடுதா? நீ இருந்து பாரு."



"ஆமாப்பா, இவருக்கு காலும் கைகள்தான் ஓடல. இங்க பஸ்சே ஓடல. அவன் கால் வழியிலியும், கை வலியிலியும், கண்ணு வழியில துடிக்கிறான்."

"யோவ், சும்மா விளையாட்டு பேச்சு பேசிக்கிட்டு இருக்காதயா. அங்க வழியில துடிச்சுக்கிட்டு இருக்காங்க. நீங்க என்னடானா, இரண்டு பேரும் இங்க என்னென்ன வேடிக்கை பேச்சும் தமாசாவும் பேசிக்கிட்டு இருக்கீங்க.

வாங்க, எல்லாம் போய் பண்ணையார் இடம் கேட்டு குதிரை வண்டியை பார்த்து கூட்டிட்டு போலாம் ஆஸ்பத்திரிக்கு. இரண்டு பேரையும்..."

"பேசிக்கிட்டே இருக்கீங்க, என்னையா பண்ணப் போறீங்க?" என்றார்கள் கோவத்தில் இன்னும் ஒருவர்.

"ஏய், வாங்கப்பா! எல்லாரும் பண்ணையார் வீட்டுல குதிரை வண்டி வைத்திருக்கிறார் அல்லவா, அதை கூப்பிட்டு வரலாம்," என்று அங்கு ஒரு சிலர் சென்றார்கள்.

பண்ணையார் வீட்டுக்கு ஊர்க்காரர்கள் போனார்கள். அங்கு பண்ணையார் வீட்டின் வெளியே அசோகன் என்பவன் வேலை செய்து கொண்டிருந்தான்.

அவன் இவர்களைப் பார்த்து, "என்னையா, ஊர்க்காரர்கள் எல்லாம் ஒண்ணா வந்திருக்கீங்க?" என்றான்.

அதற்கு ஊர்க்காரர்களில் ஒருவரானவர், "என்னடா அசோகா, நீ என்ன நம்ம ஊர்க்காரன் இல்லையா? என்னை பக்கத்து ஊர்க்காரன்னு நினைச்சியா?" என்றார்.

அதற்கு அசோகன் சொன்னான், "அண்ணே, இல்லண்ணே... சொல்லுங்கண்ணே, என்னண்ணே?"

வந்தவர்களில் சிலர் சொன்னார்கள், "ஐயா, பண்ணையாரை பாக்கணும்," என்றார்கள்.

"சரிங்க ஐயா, நீங்க எல்லாம் இங்கே இருங்க. நான் போய் ஐயா கிட்ட சொல்லுறேன்," என்று அசோகன் பண்ணையார் இருக்கும் அறைப் பக்கமாக போய்,

"ஐயா, ஐயா... உங்களைப் பார்க்க ஊர்க்காரர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள்," என்றான்.

(தொடரும்)

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

# ஒரு புன்னகை செய்




உன் மவுனம் மவுனமாக இருந்தால்
என்னவாகும் என் மனம் பொழுது
பொழுதாக இருந்தாலும் அது பகல்
இரவாக மாறுவது போல் உன் மவுனம்
கலைத்து ஒரு புன்னகை செய்வாயா
மேகம் கூட மவுனமாக இருந்தாலும்
அது மவுனம் கலைத்து மழை சாரலாக
புன்னகை செய்கிறது உன் மவுனம்
மவுனமாக இல்லாமல் உன் மவுனம்
கலைத்து ஒரு புன்னகை செய்
எனக்காக நான் உன் ரசிகன் தானே

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

# சான்றோர் குரல்

| சந்தா விபரம்: | | விளம்பர கட்டணம் | |
|---|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 | கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 | 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 | பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| | | பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| | | முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| | | 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

**Contact No: 99622 35002**

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE




ஹலோ காதலர்களே உங்களுக்குத்தான் இந்தக் காதலர் தின நல்வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் காதலர்கள் தின நல்வாழ்த்துக்கள் கண்களால்பா ர்த்து பார்த்து காதுகளால் பேசும் வார்த்தைகளை கேட்டு கேட்டு மனதுக்குள்ளே நினைத்து நினைத்து நாளுக்கு நாள் அது அன்பாக வளர்ந்து அரும்பாக இருந்த மலர் காதல் ரோஜாவாக மலர்ந்தது அன்பு என்னும் நறுமணத்தால் நூல் இல்லாமல் நாரி இல்லாமல் ஊசி இல்லாமல் மல்லிகைப்பூ மாலையாகமனதுக்குள் மனம் வீசி மாலை சூடும் மனநாளை தேடும் காதல் தானே காதலர் தின நாள் பூக்களோடு வண்டுகள் பேசுவது போல் காதலர்கள்மனதோடு மனம் பேசி மனதுக்குள்ளே







காதல் மயக்கத்தில் பூக்களோடு வண்டு மயங்கியது போல் வண்டுவிடம் பூக்கள் மயங்கியது போல் பூக்களுக்கு வண்டு மீது ஏக்கம் வண்டுகளுக்கு பூக்கள் மேல் மயக்கம் இது போல் தான் காதலர்களின் மயக்கம் கனவிலயும் நினைவில் அன்பு என்னும் அடையாளமாக மலர்ந்த மலர்கள் தான் காதல் என்னும் காதல் பண்ணும் ஜீவன்கள் அனைத்துக்கும் காதலர்கள் தின இன் நாளி காதலர்கள் அனைவரும் காதலில் வெற்றி பெற்று கைகளை பற்றி கொண்ட காதலில் வெற்றி பெற்று வீர திலகமிட்டு கைகளோடு கைகள் கொருத்து கொண்டு காதலர்கள் வாழ்ந்து காட்டட்டும் காதல் வாழ்க வாழ்க வாழ்க என காதலர்கள் அனைவருக்கும் காதலர் தின நல்வாழ்த்துக்கள். ●

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

ஆன்மிகம்



எங்கும் காணாத என் பெருமாளை இங்கே கண்டேனே என் பெருமாளை போற்றி போற்றி போற்றி என் பெருமாளை இங்கே கண்டேனே நமோ நாராயணா கோவிந்தா கோபாலா ஸ்ரீராமா ஸ்ரீகிருஷ்ணா நமோ நாராயணா கால பெருமாளின் கருணையால் காலச் சூழலில் நாமெல்லாம் நலமாக வாழ்கிறோம் நாராயணனின் திருநாமம் தினமும் நாம் சொல்லி மகிழுந்து வாழ்வோம் ஸ்ரீமன் நாராயணன் திருபெயர்கள் தான் எத்தனையோ எத்தனையோ அத்தனை ஆலயங்களிலும் ஸ்ரீமன் நாராயணனின் அருளால் தானே மாலை நேரம் போல் சில நேரம் பொழுது மாறினாலும் ஸ்ரீமன் நாராயணனின் கருணையாளும் அருளாலும் காலைப்பொழுதில் கதிரவன் ஒளிபோல் நம் வாழ்வில் ஒளி பெற்று சுகமாக வாழும் வாழ்க்கை தானே வாழ்வோம் ஸ்ரீமன் நாராயணனின் அருளால் நாமெல்லாம் நலம் பெற்று வாழ்வோம் நமோ நாராயணா நமோ நமஹ நமோநாராயண நமோ நமஹ நமோ நாராயண நமோ நமஹ நமோ நாராயணனின் திருநாமம் போற்றி போற்றி போற்றி

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107.
Phone: - 8681876155, 9444842105.

# திமுக ஆட்சியில் செய்த ஊழல்

**திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சீனிவாசன் பரபரப்பு பேச்சு**




✍ லட்சுமணன், திண்டுக்கல்.

தேர்தல் வருவதால் முதலமைச்சர் ஸ்டாலின் நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார். நான்கரை ஆண்டுகளாக தாலிக்கு தங்கம் போன்ற பல்வேறு திட்டங்கள் சென்றடையவில்லை. இதனை பெண்கள் புரிந்து கொண்டு உள்ளனர். திண்டுக்கலில் மாற்றுக் கட்சியை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் இணைப்பு விழாவில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி சீனிவாசன் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

திண்டுக்கல், நத்தம் சாலையில் அமைந்துள்ள அதிமுக கட்சி அலுவலகத்தில் திமுக , விசிக மற்றும் மாற்றுக் கட்சியை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் முன்னாள் மாமன்ற உறுப்பினர் ரமேஷ் ஏற்பாட்டில் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திண்டுக்கல் சி.சீனிவாசன் முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைந்தனர்.

பின் அதிமுக முன்னாள் அமைச்சர் சீனிவாசன் செய்தியாளர்களை சந்தித்து பேசும்போது, பெண்களுக்கான திட்டங்கள் அதிகளவு திமுக கொண்டு வந்துள்ளது குறித்த கேள்விக்கு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கொடுத்த அனைத்து திட்டங்களும் நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் வருவதால் முதலமைச்சர் ஸ்டாலின் நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

நான்கரை ஆண்டுகளாக தாலிக்கு தங்கம் போன்ற பல்வேறு திட்டங்கள் சென்றடையவில்லை. இதனை பெண்கள் புரிந்து கொண்டு உள்ளனர்.

மகளிர்க்கு ரூபாய் 1000 கொடுத்துவிட்டு டாஸ்மார்க், மின்சாரம் விலை ஏற்றியுள்ளனர்.

அத்தியாவசிய பொருள்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளது. ரூபாய் ஐயாயிரம் செலவு செய்யக்கூடிய குடும்பம் தற்போது பத்தாயிரம் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது.

மூன்று மடங்கு விலைவாசி உயர்த்திவிட்டு அதில் ஆயிரம் கொடுத்துவிட்டு பெண்களுக்கு கொடுக்கிறோம் என நாடகம் நடத்துகின்றனர்.

மூன்று வருடத்திற்கு பின்பே தற்போது மகளிர் உரிமைத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இதனை பெண்கள் புரிந்து வைத்துள்ளனர்.

அதிமுக தேர்தல் அறிக்கையில் குத்துவிளக்கு திட்டம் இல்லங்களுக்கு சென்று சேராது என எம்பி கனிமொழி கூறியது குறித்த கேள்விக்கு

ரூ. 1000 சென்று சேரும்பொழுது ரூ. 2000 சென்று சேராதா? சென்ற தேர்தலில் ரூபாய் 1500 அறிவித்து அது மக்களிடம் சென்று சேரவில்லை அதனால் தற்போது அறிவித்துள்ளார். கட்டாயம் இல்லங்களுக்கு சென்று சேரும் இது கனிமொழியின் பகல் கனவு.

என்.டி.ஏ கூட்டணி உருட்டி மிரட்டி உருவாகிய கூட்டணி என முதலமைச்சர் ஸ்டாலின் கூறியது குறித்த கேள்விக்கு

ஆளும் கட்சியாக திமுக உள்ளது. யாரை உருட்டுவது, மிரட்டுவது அப்படி யாரும் இல்லை. பொய் பேசி வருகின்றனர். பாஜகவுடன் ஏற்கனவே இருந்த கூட்டணி தான், டிடிவி அவருடன் தான் இருந்தார் தற்போது வந்துள்ளார். பொய்யான தகவல். பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக எடப்பாடி பழனிச்சாமி பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார் என்று முதலமைச்சர் கூறியது குறித்த கேள்விக்கு கேள்வியே தவறு பொதுச் செயலாளர் பதவிக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. திமுக பாஜகவுடன் இருந்தால் அவர்கள் புத்தர்கள், புனிதர்கள். அதிமுக சேர்ந்தால் துரோகிகள். "மாமியார் உடைத்தால் மண் குடம் மருமகள் உடைத்தால்



"பொன் குடம்" என்பது போல் உள்ளது. இது நாயக்கற்ற பேச்சுகள்.

அதிமுக கூட்டணியின் வெற்றி வாய்ப்பு எவ்வாறு உள்ளது என்ற கேள்விக்கு ஐந்து புதிய திட்டங்கள் மூலம் வாக்கு வங்கி உயர்ந்துள்ளது. மக்களிடம் வரவேற்போம் உள்ளது.

திமுக ஹாட் பாக்ஸ் டிபன் பாக்ஸ் கொடுப்பது குறித்த கேள்விக்கு ஆளுங்கட்சியிடம் பணம் உள்ளது. பல தவறான வழிகளில் இருந்து பணம் வந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி பின்பு பார்த்துக் கொள்ளலாம்.

சட்டமன்ற தேர்தலுக்குப் பின்பு அதிமுக என்ற கட்சி இருக்காது என அமைச்சர் ஐ பெரியசாமி பேசியது குறித்த கேள்விக்கு ஐ பெரியசாமி பாவம் எதற்காக இப்படி பேசுகிறார் என்று தெரியவில்லை.

திமுக பெரிதாக எதிர்பார்த்தது அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் அவர்களை ஏமாற்றி உள்ளனர்.

ஓய்வூதியம் என்ற அறிவித்திருப்பது ஊதியத்தின் 10 சதவீதம் பிடித்தம் செய்து பின்பு கொடுப்பது. அவர்கள் கேட்ட பழைய ஓய்வூதிய திட்டத்தை அறிவிக்கவில்லை.

திமுகவில் உள்ள சிலர் இனிப்பு வழங்கி வெற்றி பெற்றதாக தெரிவித்து வருகின்றனர். இன்று வரை இடைநிலை ஆசிரியர் போராடி வருகின்றனர். இப்படி இருக்க எப்படி வெற்றியடையும்.

அரசாங்கத்தை எதிர்த்து போராடுபவர்களை ஏன் என்று கேட்க நாதியில்லை. துப்புரவு பணியாளர்களை ஏன் என்று கேட்க நாதியில்லை.

திண்டுக்கல் மாவட்டத்தில் அதிமுக எத்தனை தொகுதிகளில் வெற்றி பெறும் என்ற கேள்விக்கு

**தன்னை வளர்த்த கட்சிக்கு ஓபிஎஸ் துரோகம் செய்ய மாட்டார் என டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். நல்லதே நடக்கட்டும். ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் கொள்ளை அடித்த பணம் அனைத்தும் டிடிவி தினகரன் சசிகலாவிடம் உள்ளது என கூறியிருந்தது குறித்த கேள்விக்கு**

**அன்று பேசிய பேச்சுக்கள் உண்மை. அவர்கள் பேசியது உண்மை தற்போது எல்லாம் இணைந்த பின்பு முடிந்துவிட்டது என்றார்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் 7 தொகுதிகளிலும் அதிமுக வெற்றி அடையும். விலைவாசி உயர்வு, சட்ட ஒழுங்கு கெட்டு போனது, மாணவர்கள் குட்டிச்சுவராகி, கொலை, கற்பழிப்பு அதிகரித்துள்ளது. கரப்ஷன், கலெக்ஷன் என்று சொல்வது போல் லஞ்சம் இல்லாமல் எந்த வேலையும் நடைபெறுவதில்லை. 24 மணி நேரம் சர்பத் கடை போல் டாஸ்மார்க் கடைகள் செயல்பட்டு வருகிறது.

திமுகவில் ஒருவர் இருந்து அவரது அம்மா பெட்டிக்கடை வைத்திருந்தால் அங்கும் கஞ்சா பொட்டணங்கள் கொடுக்கின்றனர்.

மக்கள் பயந்து போய் உள்ளனர். ரவுடித்தனம் அதிகரித்துள்ளது. கஞ்சா விற்பவர்களை காவல்துறை பிடித்தால் உடனடியாக அமைச்சர் பேசுகின்றனர். அனைவருக்கும் பங்கு செல்வதால் யாரும் கண்டு கொள்வதில்லை.

காவல்துறையினரே கஞ்சா விற்பனை செய்தார் என செய்தி வருகிறது. அரசாங்கமும் காவல்துறையும் கூட்டாக செயல்படுகின்றனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என அடித்து சொல்வேன் என்று கூறியது குறித்த கேள்விக்கு அதிமுக ஆட்சியில் கோயம்புத்தூர் பெண்களுக்கு பாதுகாப்பு மாநிலம் என சான்றிதழ் பெற்றுள்ளது. திமுக ஆட்சியர் பாதுகாப்பு எங்கு உள்ளது. கனிமொழி கூட்டத்திலேயே இரண்டு காவலர்கள் திமுக பிரமுகர்களை கூட்டிக்கொண்டு சென்று விட்டனர்.

தற்போது அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சட்ட ஒழுங்கு மற்றும் எதுவுமே கிடையவே கிடையாது. காவல்துறை பற்றி கவலை இல்லை எது நடந்தாலும் அமைச்சர்கள் பார்த்துக் கொள்வார்கள். அவர்கள் சொல்வது பொய்.

தேமுதிகவில் இருந்த 20 முன்னாள் எம்எல்ஏக்கள் அதிமுக, திமுகவில் உள்ளனர் என்பதை அனைவரும்



புரிந்துகொள்ள வேண்டும் என விஜய பிரபாகரன் கூறியது குறித்த கேள்விக்கு

பிரேமலதாவிடம் பேசிக்கொண்டு உள்ளோம். வெற்றி கூட்டணி அமையும் எனக் பிரேமலதா கூறியுள்ளார்.

திமுக வெற்றி வாய்ப்பு குறித்த கேள்விக்கு

அதிமுக நூற்றுக்கு நூறு சதவீதம் வெற்றி பெறும். பீகாரில் லல்லு பிரசாத் மகன் தங்களுக்கு தான் வெற்றி என கூறிக் கொண்டிருந்தார். ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணி 220 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

பீகாரில் வந்த தீர்ப்பு தமிழகத்திற்கும் வரும்

ஆதரவாளருக்கு அமைச்சர் பதவி கிடைக்க முயற்சிப்பேன் என்ற டிடிவி தினகரன் கூறியது குறித்த கேள்விக்கு

அமைச்சர் பதவி கேட்டு அழுத்தம் கொடுக்க மாட்டோம் என டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

த.வெ.க தலைவர் விஜய் ஆண்ட கட்சி மற்றும் ஆளும் கட்சி ஊழல் செய்திருப்பதாக கூறியது குறித்த கேள்விக்கு

மகாத்மா காந்திகள் புத்தரின் வாரிசுகளை விஜய் உடன் வைத்துள்ளார். கள்ள டிக்கெட் எவ்வளவுக்கு விற்கிறார் விஜய். ஒரு பைசா கூட தேவையில்லை என்று கூறுகிறார் ஏற்கனவே படத்தின் மூலம் பணம் வந்துவிட்டது. கள்ள டிக்கெட் விற்காமல் பணம் எவ்வளவு வந்தது என வருமான வரி கட்டினால் நியாயமான மனிதர் என கூறலாம். தற்போது ஒன்றரை கோடி அபதாரம் விதிக்கப்பட்டுள்ளது. ஒரு படத்திற்கு, இதுகுறித்து வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது. விஜய் ஏற்கனவே ஊழல் செய்து கொண்டு இருக்கிறார். ஆதவ் அர்ஜூன் லாட்டரி டிக்கெட் எப்படி விற்பார் என்று எல்லோருக்கும் தெரியும். இவர்கள் அனைவரும் ஊழலை பற்றி பேசும்போது சிரிப்புதான் வருகிறது. எம்ஜிஆரை வழிகாட்டி என விஜய் கூறுகிறார். ஆண்ட கட்சி என கூறலாமா? அவரது கொள்கை என்ன? நான் இதை செய்வேன் அதை செய்வேன் எனக் கூற வேண்டும் குறை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை

ஊழல் நடப்பது ஆளுங்கட்சியில் அதை சொல்லுங்கள். எங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி மீது ஊழல் வழக்கு தொடரப்பட்டது அனைத்து தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. திமுகவில் 16 அமைச்சர்கள் மீது ஊழல் புகார் உள்ளது. குறிப்பாக செந்தில் பாலாஜி, மகாத்மா காந்தி போல் கண்டக்டர் வேலைக்கு பணம் வாங்கியதை திருப்பி கொடுத்து விட்டோம் என கூறியுள்ளார். 476 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்துள்ளார். குற்றவாளியாக தண்டனை பெற்றவருக்கு அமைச்சர் பதவி கொடுத்த உத்தமர் தான் நமது முதல்வர் மு க ஸ்டாலின்.

சொத்துக் குவிப்பு வழக்கில் டிடிவி தினகரன் சசிகலா தலை மீது கத்தி தொங்கிக் கொண்டு இருக்கிறது என நீங்கள் கூறினீர்கள் தற்போது கூட்டணி வைத்துள்ளீர்கள் என்ற கேள்விக்கு

டிடிவி தினகரன் பேசியது அவரைப் பற்றி நாங்கள் பேசியது எல்லாம் மறக்கப்படுகிறது. இன்றைக்கு நாங்கள் ஒன்றாக இணைந்துள்ளோம். அதுதான் இதற்கு பதில்

ஓபிஎஸ் என்டிஏ கூட்டணியில் இணைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்ற கேள்விக்கு

அவரிடம் தான் கேட்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐடியாவில் இருக்கின்றனர். அதனை ஆராய முடியாது.

முதலில் தை பிறந்தால் வழி பிறக்கும் என தெரிவித்தார் தற்போது தை 31ஆம் தேதி என தெரிவித்துள்ளார்.

தன்னை வளர்த்த கட்சிக்கு ஓபிஎஸ் துரோகம் செய்ய மாட்டார் என டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். நல்லதே நடக்கட்டும். ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் கொள்ளை அடித்த பணம் அனைத்தும் டிடிவி தினகரன் சசிகலாவிடம் உள்ளது என கூறியிருந்தது குறித்த கேள்விக்கு

அன்று பேசிய பேச்சுக்கள் உண்மை. அவர்கள் பேசியது உண்மை தற்போது எல்லாம் இணைந்த பின்பு முடிந்துவிட்டது. என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி எஸ் ராஜமோகன், மேற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், பகுதி செயலாளர்கள் சேசு,மோகன், சுப்பிரமணி, இக்பால், விடி ராஜன் , பிஜிஎம் முரளிதரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர். ●

## ஆசிரியர் பணி தகுதிக்கான 'டெட்' தேர்வில்

# 1.50 லட்சம் பேர் தேர்ச்சி



பள்ளி ஆசிரியர் பணித் தகுதிக்கான 'டெட்' தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு 1.50 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆசிரியர்கள் தங்களது தேர்ச்சி சான்றிதழை நாளை (பிப்.2) முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று டிஆர்பி தெரிவித்துள்ளது.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, அனைத்து விதமான பள்ளிகளிலும் இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர தகுதித் தேர்வில் (டெட்) தேர்ச்சி பெறவேண்டும். இந்த தேர்வு மொத்தம் 2 தாள்களை கொண்டது. முதல் தாளில் தேர்ச்சி பெறுவோர் இடைநிலை ஆசிரியராகவும், 2-ம் தாளில் தேர்ச்சி பெறுவோர் பட்டதாரி ஆசிரியராகவும் பணிபுரியலாம். தமிழகத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் (டிஆர்பி) மூலம் டெட் தேர்வு நடத்தப்படுகிறது.

கடந்த 2025-ம் ஆண்டுக்கான டெட் தேர்வு கடந்த நவம்பர் 15, 16-ம் தேதிகளில் நடைபெற்றது. 4.24 லட்சம் பேர் தேர்வு எழுதினர். மொத்தம் 150 மதிப்பெண்கள் கொண்ட டெட் தேர்வில் தேர்ச்சி பெற, பொதுப் பிரிவினர் 60 சதவீதமும் (90 மதிப்பெண்), இடஒதுக்கீட்டுப் பிரிவினர் 55 சதவீதமும் (82 மதிப்பெண்) எடுக்க வேண்டும். ஆந்திரா, தெலங்கானா, ஒடிசாவைப் பின்பற்றி, தமிழகத்திலும் சமீபத்தில் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு டெட் தேர்ச்சி மதிப்பெண் 5 சதவீதம் வரை குறைக்கப் பட்டது.

**இணையதளத்தில் முடிவுகள்:** அதன் அடிப்படையில், டெட் தேர்வு முடிவுகளை டிஆர்பி நேற்று முன்தினம் இரவு வெளியிட்டது. தேர்வு முடிவு விவரங்களை http://trb.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம். ஆசிரியர்கள் தங்களது தேர்ச்சி சான்றிதழை நாளை (பிப்.2) முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று டிஆர்பி தெரிவித்துள்ளது.

**தேர்ச்சி விகிதம் உயர்வு:** டெட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் பற்றிய தரவுகளும் வெளியாகியுள்ளன. முதல் தாள் தேர்வை 92,417 பேர் எழுதிய நிலையில், 45,469 பேர் (49.20%) தேர்ச்சி பெற்றுள்ளனர். 2-ம் தாள் தேர்வை 3 லட்சத்து 31,900 பட்டதாரிகள் எழுதிய நிலையில், ஒரு லட்சத்து 4,604 பேர் (31.5%) தேர்ச்சி பெற்றனர். மொத்தம் 1.50 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

முந்தைய டெட் தேர்வுகளில் தேர்ச்சி சதவீதம் 10-15 வரை

மட்டுமே இருந்தது. இந்த முறை வினாத்தாள் வழக்கத்தைவிட மிகவும் எளிதாக இருந்ததுடன், தேர்ச்சி மதிப்பெண்களும் குறைக்கப்பட்டதால், தேர்ச்சி விகிதம் உயர்ந்துள்ளது.

மேலும், பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் டெட் தேர்ச்சி கட்டாயம் என்று உச்ச நீதிமன்றம் கடந்த செப்டம்பரில் உத்தரவிட்டது. இதனால், தற்போது பணியில் உள்ள ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் கடந்த நவம்பரில் டெட் தேர்வு எழுதினர். அவர்களில் பலர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஏராளமான ஆசிரியர்கள் ஓரிரு மதிப்பெண்களில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளனர். அதேநேரம், வினாத்தாளில் தவறாக இடம்பெற்ற சில கேள்விகளுக்கு முழு மதிப்பெண் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அத்தகைய தவறான வினாக்களுக்கு மதிப்பெண் அளிக்க வேண்டும் என்று பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். 2026-ம் ஆண்டுக்கான வருடாந்திர திட்டத்தின்படி, இந்த ஆண்டில் 2 முறை டெட் தேர்வுகள் நடத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# திண்டுக்கல் மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்திய போலீஸ் துப்பாக்கிச் சூடு சம்பவம்





திண்டுக்கல்லைச் சேர்ந்த விக்னு என்ற விக்னேஸ்வரன், 3 கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளில் தொடர்புடைய ரவுடி என போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், விக்னேஸ்வரனை பிடிக்க சென்றபோது, சார்பு ஆய்வாளர் ஜான்சன் மீது அரிவாளால் வெட்டி தப்பிச் செல்ல முயன்றுள்ளார். இதனைத் தொடர்ந்து, நகர் துணை காவல் கண்காணிப்பாளர் கார்த்திக், ரவுடி விக்னேஸ்வரனை துப்பாக்கியால் காலில் சுட்டு கைது செய்தார். இந்த துப்பாக்கிச் சூட்டில், விக்னேஸ்வரன் வலது முட்டியில் படுகாயம் அடைந்து திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேபோல், சார்பு ஆய்வாளர் ஜான்சனுக்கு இடது கையில் வெட்டு காயம் ஏற்பட்ட நிலையில், அவரும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



குற்றவாளி விக்னேஸ்வரன்

**சான்றோர் குரல் செய்திகளுக்காக, திண்டுக்கலில் இருந்து செய்தியாளர் லட்சுமணன் உடன் செய்தி வாசிப்பாளர் முத்துலட்சுமி.**

# “பாப்பாவையும் பாட்டியையும் போதை ஆசாமிகள் சீரழிக்கும் நிலை”

## அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றச்சாட்டு

6 வயது சிறுமி முதல் மூதாட்டிகள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. போதை ஆசாமிகள் எந்த நேரம் இவர்களை சீரழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்று தெரியவில்லை என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: உலக சரித்திரத்தில் ஹிட்லர், முசோலினி, நீரோ போன்ற சர்வாதிகாரிகளின் மொத்த உருவமாக, முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழக மக்கள் பார்க்கின்றனர். கடந்த 56 மாத திமுக ஆட்சியில் காவல் துறையை தனது ஏவல் துறையாக, முதல்வர் ஸ்டாலின் மாற்றி வைத்துள்ளதால் சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. 6 வயது சிறுமி முதல் மூதாட்டிகள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. போதை ஆசாமிகள் எந்த நேரம் இவர்களை சீரழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்று தெரியவில்லை.

இந்நிலையில், திமுக ஆட்சி முடிவுக்கு வரும் நிலையில், ‘ரோம் நகரம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போல்’ மகளிர் மாநாடு நடத்துகிறார். 56 மாதங்களாக நிர்வாகத் திறனற்ற ஆட்சி செய்து, இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்றிவிட்டு, நிதியே இல்லாமல் மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கோடிக்கணக்கான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.




சென்னை தரமணியில் வெளிமாநில இளம்பெண், கணவன், 2 வயது குழந்தை அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். நந்தனம் கலைக்கல்லூரி கேன்டீனில் பணியாற்றிய அரியலூர் பெண், திமுக பிரமுகர் மற்றும் அவரது நண்பர்களால் சீரழிக்கப்பட்டுள்ளார். இந்த கொடுஞ்செயலில் ஈடுபடுபவர்களுக்கு போலீஸை கண்டு பயமில்லாத நிலை இருப்பதற்கு ஆட்சியாளர்களே காரணம்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு ஏதாவது ஒரு வகையில் ஆளும்கட்சியினர் அடைக்கலம் அளிப்பதுதான், தற்போது தமிழகம் குற்றவாளிகளின் கூடாரமாக மாறி உள்ளதற்குக் காரணம். பெருநகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை தடை இல்லாமல் போதைப் பொருட்கள் கிடைப்பதும், அவைகளை கொண்டு செல்வதில் ஆளும் கட்சியினரில் சிலர் ஈடுபட்டு வருவதும், பெரும் சீரழிவுக்கு காரணமாக உள்ளது. சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத முதல்வர் ஸ்டாலினை கண்டித்து வீதியில் இறங்கி நாள்தோறும் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதில், இரும்புக்கரம் கொண்டு அடக்கும் வேலையில்தான் திமுக அரசு ஈடுபட்டுள்ளது.

பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை கொள்ளையடித்து, தங்கள் பரம்பரையின் வாழ்வை மட்டுமே வளப்படுத்தும் நோக்கில், அல்லும் பகலும் செயல்படும் ஸ்டாலினின் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டும் காலம் நெருங்கிவிட்டது. நம்மை கேள்வி கேட்க யாருமில்லை; நம்மை வெல்லும் சக்தி எங்குமில்லை என்ற மமதையோடு உள்ளார் முதல்வர் ஸ்டாலின். விரைவில் தேர்தலை தமிழகம் சந்திக்கும்; மக்கள் மாறுதலை தருவார்கள். திமுக கூட்டம் மூலைக்கு மூலை அடக்கி ஒடுக்கி வைக்கப்படும். தமிழக மக்கள் குறிப்பாக பெண்கள் சுதந்திரம் பெறுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருப்பரங்குன்றம் தீபத்தூண் தொடர்பான அவமதிப்பு வழக்கில்

# மன்னிப்பு கோரினார் மதுரை ஆட்சியர்

**திருப்பரங்குன்றம் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர், துணை ஆணையர், கோயில் செயல் அலுவலர் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி நிபந்தனையற்ற மன்னிப்பு கோரினர்.**

## விசாரணையை மார்ச் 2–ம் தேதிக்கு தள்ளிவைத்தது உயர் நீதிமன்றம்



திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபத் திருநாளான கடந்த டிச.3-ம் தேதி தீபம் ஏற்ற உத்தரவிட வேண்டும் என மதுரையைச் சேர்ந்த ராம.ரவிக்குமார், அரசபாண்டி உள்ளிட்டோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டார். ஆனால், அந்த உத்தரவை மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் நிறைவேற்றவில்லை. இதுதொடர்பான நீதிமன்ற அவமதிப்பு மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த விவகாரத்தில் தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டதாக மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், டிஜிபி டேவிட்சன் தேவாசிர்வாதம், மாநகர காவல் ஆணையர் லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன், திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர் யக்ஞ நாராயணன் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி அரசபாண்டி தரப்பில் நேற்று முன்தினம் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. ‘சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அகில இந்திய பணி விதிகள் (நடத்தை) 1968-ன் அடிப்படையில் துறைரீதியான மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மத்திய உள்துறைச் செயலருக்கு உத்தரவிட வேண்டும்’ என்று அதில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான அனைத்து மனுக்களும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தன.

ஆட்சியர் பிரவீன் குமார், காவல் ஆணையர் லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன், கோயில் செயல் அலுவலர் யக்ஞ நாராயணன் ஆகியோர் ஆஜராகினர். அவர்களது தரப்பில் பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஆட்சியர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், ‘நீதிமன்ற உத்தரவை மீற வேண்டும் என்ற எண்ணத்தில் எதையும் செய்யவில்லை. சூழலைக் கருத்தில் கொண்டே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தவறு என்றால், நிபந்தனையற்ற மன்னிப்பு கோருகிறேன்.நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைக்க வேண்டும்’ என்று கூறப்பட்டது.

மற்ற அதிகாரிகள் தரப்பிலும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த வாதம்:

**நீதிபதி:** “திருப்பரங்குன்றம் மலை மேல் யாரையும் அனுமதிக்க முடியாது. அதனால் வரும் பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்” என்று காவல் துறை தரப்பில் பேசியதாக கூறப்படுகிறதே? அப்படி சொன்னது யார்?

**அரசுத் தரப்பு:** எந்த அலுவலரும் அது போன்ற வார்த்தைகளை சொல்லத் துணியமாட்டார். ஒருவேளை, அவ்வாறு கூறியிருந்தால், வெளிப்படையாக மன்னிப்பு கோரட்டும். ஆட்சியர், காவல் ஆணையர், துணை ஆணையர் ஆகியோர் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருகின்றனர். அதை ஏற்று அவமதிப்பு வழக்கை முடித்துவைக்க வேண்டும். நீதிபதி கோரும் அனைத்து பதில் மனுக்கள், பிரமாணப் பத்திரங்களையும் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம்.

**நீதிபதி:** மற்றவர்களைக்கூட மன்னிக்கலாம். ஆனால், நீதிமன்றம் உத்தரவிட்டும் ஆட்சியர் எப்படி 144 தடை உத்தரவு பிறப்பிக்கலாம்? அவ்வளவு தைரியமா?

**அரசுத் தரப்பு:** 10 ஆண்டு உழைத்து ஆட்சியராக வந்திருக்கும் இளைஞரின் வாழ்வை கருத்தில் கொள்ள வேண்டும். தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால், நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கில் எதையும் செய்யவில்லை. எனவே, ஆட்சியர் தரப்பில் கூடுதலாக பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும். இவ்வாறு வாதம் நடந்தது.

பிறகு, ஆட்சியர் மீதான அவமதிப்பு வழக்கை தனியாகவும், மற்ற அதிகாரிகள் மீதான அவமதிப்பு வழக்கை தனியாகவும் பிரித்து நீதிபதி உத்தரவிட்டார். “அடுத்த விசாரணைக்கு ஆட்சியர் மட்டும் ஆஜராக வேண்டும்” என்று உத்தரவிட்டு, வழக்கை மார்ச் 2-க்கு தள்ளிவைத்தார்.

# “எங்களைப் பார்த்தால் பாவமாகத் தெரியவில்லையா?”



பெரியகுளத்தில் தனது ஆதரவாளர்களுடன் ஓபிஎஸ் ஆலோசனை நடத்தினார்.

முன்னாள் முதல்வரும் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் ஒருங்கிணைப்பாளருமான ஓபிஎஸ், தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து தனது அமைப்பின் தேனி மாவட்ட நிர்வாகிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் உள்ள தனது பண்ணை வீட்டில் நடந்த இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் ஓபிஎஸ் கூறியதாவது:

நாங்கள் எந்த ஒரு முடிவும் எடுக்காத நிலையில் வதந்திகளை தொலைக்காட்சி மற்றும் யூடியூப் சேனல்கள் செய்தியாக வெளியிடுவது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது. எங்கள் பக்கம் தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்துக் காட்டவே மக்களவைத் தேர்தலில் ராமநாதபுரத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டேன்.

அந்தத் தேர்தலில் 12 நாட்கள் தான் எனது தேர்தல் பிரச்சாரம் இருந்தது. அப்போது 6 ஓ.பன்னீர்செல்வங்களை நிறுத்தினார்கள். எப்படியாவது ஓபிஎஸ்ஸை தோற்கடித்து, தொண்டர்களும் மக்களும் அவர் பக்கம் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி தான் அது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

## ஓபிஎஸ் கேள்வி

அந்த சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்து சட்டப் போராட்டத்தின் மூலம் அதிமுக தொண்டர்களின் உரிமையை மீட்டெடுப்பது தான் எங்கள் நோக்கம். தனிக் கட்சி தொடங்குவது குறித்தோ, தேர்தலில் போட்டியிடுவது குறித்தோ நாங்கள் இன்னும் முடிவு எடுக்கவில்லை. பிரிந்து கிடக்கும் அதிமுக சக்திகளை ஒருங்கிணைக்கவும், யாராலும் வெல்லமுடியாத சக்தியாக அதிமுக-வை எப்படி ஜெயலலிதா உருவாக்கினாரோ அத்தகைய சூழலை மீண்டும் உருவாக்கவும் தான் சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எனவே, தேவை இல்லாத குழப்பங்களை தொண்டர்கள் மற்றும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டாம். தேனி மாவட்டம் அதிமுக சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கிறது. எம்ஜிஆர், ஜெயலலிதா என இரண்டு பேரை முதலமைச்சராக ஆக்கியது தேனி மாவட்டம். இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் அதிமுக மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதை நானும் என்னோடு சேர்ந்த 88 மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளும் தலையாய கோரிக்கையாகக் கொண்டு போராடி வருகிறோம்.

எதிரும் புதிருமாக இருந்த டிடிவி. தினகரனும் இபிஎஸ்ஸுமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஒன்றிணைந்திருக்கிறார்கள். நாங்களும் ஒன்றிணையத் தயாராய் இருக்கிறோம். டிடிவி.தினகரன் இதை அவரது அருமை அண்ணன் இபிஎஸ்ஸிடம் வலியுறுத்த வேண்டும். அப்படி இணைந்தால் அதிமுக மாபெரும் வெற்றி பெறும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர எங்களுக்கு அழைப்பு வந்ததா என்பது பரம ரகசியம். நான் இரண்டாவது தர்மயுத்தத்தை தொடங்கக் காரணமே இப்போது திமுக-வில் இருக்கும் மனோஜ் பாண்டியனும் வைத்திலிங்கமும் தான். நான் தவெக அல்லது திமுக-வில் இணையப் போவதாக வதந்திகளை பரப்புவதை ஊடகங்கள் நிறுத்த வேண்டும். எங்களைப் பார்த்தால் பாவமாகத் தெரியவில்லையா... தொடர்ந்து பொய்ச்செய்திகளை வெளியிட்டு வருகிறீர்கள்.

குழப்பம் விளைவிக்க வேண்டும் என்பதற்காகவே சில செய்திகளை வெளியிடுகிறார்கள். அதிமுக-வில் ஒன்றிணைய நான் ரெடியாக இருக்கிறேன். டிடிவி.தினகரனும் இபிஎஸ்ஸும் ரெடியா என்று கேட்டுச் சொல்லுங்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாதவிடாய் சுகாதாரம் என்பது அடிப்படை உரிமை:

# பள்ளியில் இலவச நாப்கின்

## மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் முக்கிய உத்தரவு

மாதவிடாய் சுகாதாரம் என்பது அடிப்படை உரிமை ஆகும். எனவே, அனைத்து மாநில அரசுகளும் பள்ளிகளில் மாணவிகளுக்கு இலவசமாக நாப்கின்களை வழங்க வேண்டும். பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி கையாள வேண்டும். மாதவிடாய் சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு இலவசமாக நாப்கின்களை வழங்க உத்தரவிடக் கோரி காங்கி ரஸ் மூத்த தலைவர் ஜெய தாக்குர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார். நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு இந்த மனுவை விசாரித்து நேற்று தீர்ப்பு வழங்கியது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

தண்ணீர் வசதியுடன் கழிப்பறை: ஊரக, நகரப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள் இருப்பதை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசு களும் உறுதி செய்ய வேண்டும்.

ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள கழிப்பறைகள் அல்லது புதிதாக கட்டப்படும் கழிப்பறைகள் மாற்றுத் திறன் மாணவிகளும் பயன்படுத்தும் வகையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து பள்ளி கழிப்பறைகளிலும் சோப்பு, தண்ணீர் இருக்க வேண்டும்.

நாடு முழுவதும் ஊரக, நகர்ப்புறங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் மக்கும் தன்மை கொண்ட (பயோடிகிரேடபிள்) நாப்கின்களை மாணவிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும். இதை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளும் உறுதி செய்ய வேண்டும். நாப்கின் வழங்க இயந்திரங்களை நிறுவலாம்.



மாணவிகள் தங்களது உள்ளாடைகள், சீருடைகள், நாப்கின்களை மாற்றிக் கொள்ளும் வகையில், பள்ளி வளாகங்களில் மாதவிடாய் நல மேலாண்மை பகுதிகளை அமைக்க வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை: பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி கையாள வேண்டும். இதற்காக பள்ளி வளாகங்களில் உள்ள ஒவ்வொரு கழிப்பறையிலும் மூடப்பட்ட நிலையில் உள்ள குப்பைத் தொட்டிகள் வைத்து உரிய முறையில் பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாதவிடாய் என்பது வெட்கப்படுவதற்கான காரணமாக இருக்கக் கூடாது. அதுபற்றிய பேச்சுகள் எப்போதும் காதில் ரகசியம் பேசுவதாக இருக்கக் கூடாது. அதுகுறித்த அறிவியல் பார்வையை மாணவர்கள் பெற வேண்டும்.

மாணவர்களுக்கும் விழிப்புணர்வு: மாதவிடாய் சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாதவிடாய் சுகாதாரம், தூய்மை தொடர்பான விழிப்புணர்வில் ஆண்களின் பங்கும் அவசியமாகிறது.

சானிட்டரி நாப்கின்களை வாங்க முடியாத சிறுமிகள் காகிதங்கள், துணி, டிஷ்யூ பேப்பர் போன்ற சுகாதாரமற்ற பொருட்களை பயன்படுத்த நேரிடுகிறது. இதன்காரணமாக, பாக்டீரியா தொற்று ஏற்பட்டு மாணவிகளுக்கு பல்வேறு உடல்நலக் குறைபாடுகள் ஏற்படக்கூடும். குழந்தைப்பேறு பாதிக்கப்படும் சூழலும் ஏற்படும். எனவே, இதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.

மாதவிடாய் குறித்த அச்சம் காரணமாக ஏராளமான சிறுமிகள் பள்ளிக்கு வருவதை தவிர்க்கின்றனர். அவர்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும்.

இலவச ஆரம்பக் கல்வி என்பது பெண் குழந்தைகளுக்கான செலவினங்களை உள்ளடக்கியதே. குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வாய்ப்புகள் சமமாக கிடைப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

RNI No. TNTAM / 2021 / 85933

# சென்னையில் பறவைக் காய்ச்சல் உஷார்



## இறந்த காகங்களை கையால் தொடக்கூடாது பொதுமக்களுக்கு சுகாதாரத் துறை எச்சரிக்கை

காகங்கள், பறவைகள் இறந்து கிடந்தால் வெறும் கைகளால் தொடக்கூடாது என்று சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை அடையாறு பகுதியில் இறந்து கிடந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்ததில், அவை ஹெச்5. என்1 பறவைக் காய்ச்சல் வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு, தலைமைச் செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் சில இடங்களில் தொடர்ந்து காகங்கள் இறந்து வருவது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, சுகாதாரத் துறை மற்றும் கால்நடைத் துறை இணைந்து, கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன.

பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கோழிகள் மற்றும் பிற பறவைகளிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று பரவும் வாய்ப்பு இருப்பதாகவும், பாதிக்கப்பட்ட பறவைகளின் கழிவுகள் மூலமாக மனிதர்களுக்கு எளிதில் தொற்று ஏற்படக்கூடும் என்றும் சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட பறவையிடமிருந்தோ அல்லது மனிதரிடமிருந்தோ ‘வெஸ்ட் நைல் வைரஸ்’ போன்ற தொற்றுகளை கொசுக்கள் கடத்தும் அபாயமும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொற்றால் காய்ச்சல், தலைவலி, தசை வலி, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் ஏற்படக்கூடும் என்பதால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறும்போது, "பறவைக் காய்ச்சலால் கோழிகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, கோழி இறைச்சியை நன்கு வேகவைத்த பிறகே பயன்படுத்த வேண்டும். மேலும், வீட்டின் அருகிலோ அல்லது பொது இடங்களிலோ இறந்து கிடக்கும் காகங்கள் மற்றும் பிற பறவைகளை வெறும் கைகளால் தொடக்கூடாது. இவ்வாறான நிகழ்வுகள் கண்டறியப்பட்டால், உடனடியாக உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சுகாதாரத் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்” என்றனர்.

அச்சம் தேவையில்லை: சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சென்னைமாநகரம் முழுவதும் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளோம். ஏற்கெனவே மாநகராட்சி சார்பில் காகங்களை பாதுகாப்பாக மயானங்களில் புதைக்கவும், எரிக்கவும் கால்நடைத் துறைக்கு, மாநகராட்சி உதவி வருகிறது. பொதுஇடங்களில் தூய்மைப் பணி மேற்கொள்வோருக்கு, இறந்த பறவைகளை கையாள்வது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சென்னையில் பொதுமக்களுக்கு பறவைக் காய்ச்சல் அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை. பறவைகள் இறப்பும் இல்லை. எனவே, பொதுமக்கள் பறவை காய்ச்சல் குறித்து அச்சப்படத் தேவையில்லை. இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# மீண்டும் கமல் தயாரிப்பில் சிவகார்த்திகேயன்?



கமல் தயாரிக்கவுள்ள புதிய படத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கபேச்சுவார்த்தைநடைபெற்று வருகிறது.

கமல் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடித்து வெளியான படம் 'அமரன்'. இப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து மீண்டும் சிவகார்த்திகேயன் நடிக்கும் ஒரு படத்தினை தயாரிக்க ராஜ்கமல் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதனை 'தாய் கிழவி' படத்தின் இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கவுள்ளார்.

பிப்ரவரி 20-ம் தேதி வெளியாகவுள்ள படம் 'தாய் கிழவி'. இதன் டீஸர், ராதிகாவின் லுக், காட்சியமைப்புகள் உள்ளிட்ட அனைத்துமே பெரும் எதிர்பார்ப்பினை உருவாக்கி இருக்கிறது. இப்படத்தினை சிவகார்த்திகேயன், பேஷன் ஸ்டூடியோஸ் ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன. இப்படத்தினைத் தொடர்ந்து சிவகுமார் முருகேசன் இயக்கவுள்ள படத்தில் நாயகனாக நடிக்கவுள்ளார் சிவகார்த்திகேயன்.

தற்போது 'பார்க்கிங்' இயக்குநர் ராம்குமார் மற்றும் வெங்கட்பிரபு ஆகியோரதுபடங்களில்நடிக்கமுடிவு செய்திருக்கிறார் சிவகார்த்திகேயன். இந்தப் படங்களைத் தொடர்ந்து சிவகுமார் முருகேசன் இயக்கவுள்ள படத்தில் நடிக்கதிட்டமிட்டுள்ளார் சிவகார்த்திகேயன். விரைவில் ராஜ்கமல் நிறுவனம் சார்பில் இப்படம் ஒப்பந்தம் செய்யப்படும் என திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# "தளராத அர்ப்பணிப்பால் எழுதப்படும் பயணம்"

## – 'மண்டாடி' பற்றி சூரி பகிர்வு



சூரி ஹீரோவாக நடிக்கும் படம் 'மண்டாடி'. மதிமாறன் புகழேந்தி இயக்கும் இந்தப் படம், படகு பந்தயத்தை மையமாகக் கொண்டு உருவாகிறது. ஆர்.எஸ்.இன்ஃபோடெயின்மென்ட் சார்பில் எல்ரெட்குமார் தயாரிக்கும் இப்படத்தில் தெலுங்கு நடிகர் சுஹாஸ், மஹிமா நம்பியார், சத்யராஜ், ரவீந்திரா விஜய், அச்யுத்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ஜி.வி.பிரகாஷ் இசை அமைக்கிறார். எஸ்.ஆர்.கதிர் ஒளிப்பதிவு செய்கிறார். தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் கோடையில் இப்படம் வெளியாக இருக்கிறது.

இந்நிலையில், இதன் படப்பிடிப்பில் கடலில் படகின் மீது உடற்பயிற்சி செய்யும் வீடியோவை வெளியிட்டுள்ள சூரி, ரத்தம், வியர்வை, தளராத அர்ப்பணிப்பால் எழுதப்படும் ஒரு பயணம் என்று 'மண்டாடி' படத்தை குறிப்பிட்டுள்ளார். இந்த வீடியோ இணையத்தில் பரவி வருகிறது.


கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323